# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்
திங்கள் வெளியீடு

## இருபத்திரண்டாம் துணர்

விய ஆண்டு—1946, 47

விய—கார்த்திகை முடிய
பொழிலாசிரியர்: வித்துவான் கோ. சி. பெரியசாமிப் புலவர்

விய—மார்கழி முதல்
பொழிற்றொண்டர்: அ. கணபதி

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

# தமிழ்ப் பொழில்

## இருபத்திரண்டாம் துணர்—உள்ளுறை.


| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. | வித்துவான் U. பழநிமுதலியார் அவர்கள், கரந்தை<br>சிலப்பதிகாரம் | 941 |
| 2 | ,, | E. R. நரசிம்மையங்கார் அவர்கள், B. A., B. L. சேலம்<br>தமிழ்நெறி விளக்க ஆராய்ச்சி | 17 |
| 3 | ,, | வித்துவான் மு. அரசங்கண்ணனார், அவர்கள் M. O. L.<br>தமிழும், கலையும் | 21 |
| 4 | ,, | மே. மாசில்லாமணியம்மையார் அவர்கள், M. A., L. T.,<br>பாரி மகளிர் | 23, 44, 70, 78 |
| 5 | ,, | மா. சிவகுருநாதன் அவர்கள் சுந்தரப்பெருமாள்கோயில்<br>புறப்பொருள் பூக்கள் | 32, 57, 233 |
| 6 | ,, | செ. வெங்கடராம செட்டியார் அவர்கள், திருப்பதி<br>ஐந்திணையும், ஐங்கணையும் | 37 |
| 7 | ,, | வித்துவான் பண்டிதர் க. பொ. இரத்தினம்<br>அவர்கள், B. A. (Hon's) B. O. L. இலங்கை<br>எழுத்தும், பேச்சும் | 53 |
| 8 | ,, | J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,<br>திருவரங்கம், சாசனங்கண்ட தமிழ் | 63, 73 |
| 9 | ,, | த. பு. நவநீதகிருட்டினன் அவர்கள் M. A.<br>அண்ணாமலைநகர்: முகில்நாடு | 83 |
| | | வயங்குவளியின் வளாகம் | 152, 183, 215 |
| | | குயத்தொழிலும் பொருணுவணையும் | 289, 301 |
| 10 | ,, | நல்ல அ. இளங்கோவன் அவர்கள், உப்பத்தூர்<br>தமிழணக்கு பதிகம் | 94 |
| 11 | ,, | புலவர் மு. கோவிந்தசாமி அவர்கள்,<br>வள்ளுவர் புரட்சிக்காரர் | 100, 137 |
| 12 | ,, | வித்துவான் ஒளவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள்<br>அண்ணாமலைநகர், சைவத்தின் இற்றை நிலை | 105 |
| | | நம்பியாண்டார் நம்பியும், ஞானசம்பந்தரும் | 139, 169 |
| 13 | | ஓர் அன்பர் — சொல்லாட்சி | 113 |
| 14 | ,, | கோ. முத்துப் பிள்ளை அவர்கள், B. A. சென்னை<br>மொழி முன்னேற்றமும், பொழுது போக்கும் | 115 |

15 ,, பண்டித ந. ரா. சுந்தரராசன் அவர்கள், சென்னை
புலவரைப் போற்றுக 118
பாத்தையிற் பிரிவு 157, 179, 223
நல்ல நட்பு 255

16 ,, வித்துவான் ச. கணபதி அவர்கள், துறையூர்
மலையர் வாழ்க்கை வரலாறு 121

17 ,, சாமி. வேலாயுதம்பிள்ளை அவர்கள் B. A., L. T., பாவநாசம்
கல்விச்சீரமைப்பு 130
பிறநாடுகளிலுள்ள தமிழ் நூல்கள் 208

18 ,, வித்துவான் க. வெள்ளைவாரணர் அவர்கள்
அண்ணாமலைநகர்—கல்லாடனார் 132, 177
பாண்டித் துரைசாமித் தேவர் 254

19 ,, K சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை
ஒழுக்கமும், விழுப்பமும் 147
சான்றோர்க்கணி 201
அரியதும், பெரியதும் 261
உயிரின் ஊதியம் 293, 319

20 ,, வ. சுப்பையா பிள்ளை அவர்கள், சென்னை
வேண்டுகோள் 167

21 ,, புலவர் சுப. மாணிக்கம் அவர்கள் B. O. L.
அண்ணாமலைநகர்—அண்ணாமலைநகரில் மணிநாவொலி 187

22 ,, வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்
திருப்பனந்தாள்—வேண்டுகோள் 190

23 ,, காமாட்சியம்மை அவர்கள், சென்னை
இறையன்பினை எழுப்புறும் பாடல்கள் 191

24 ,, A. முத்தையா அவர்கள் M. A., சென்னை:
தமிழில் கலைச் சொற்கள் 200, 217

25 ,, இராவ்பகதூர் ம. இராமச்சந்திரம் செட்டியார் அவர்கள்,
B. A., B. L., கோவை—மொழிபெயர்ப்பு 209

26 ,, பண்டிதர் அ. கிருட்டினசாமி நாயுடு அவர்கள், பூளைமேடு
திருவள்ளுவரும், கங்கையாறும் 213

27 ,, சுவாமி அருணகிரிநாதர் அவர்கள், சென்னை
வேண்டுகோள் 236

28 ,, நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M. A., B. L.,
பசுமலை—தமிழகத்து தமிழ்ப் புலவர்களையும்
இலக்கியத்தையும் புரக்கும் செல்வப் பெரியார்கட்கு 252
யாழ் நூல் அரங்கேற்று விழா வாழ்த்து 277

29 ,, புலவர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், M. O. L., L. T.,
சென்னை—தமிழகத்து வட எல்லை 307

30 அருட்டிரு சுவாமி விபுலானந்தர் அவர்கள்—தேவபாணி 314

31 உளநூல்—திரு. குஞ்சிதபாத தேசிகர் அவர்கள், திருவாரூர் 316

32 திரு. இராவ்பகதூர் A. Y. அருளானந்தசாமி நாடார் அவர்கள்
தஞ்சை—சங்க முடிபுகள் 193, 229
தலைமையுரை 225
யாழ் நூல் அரங்கேற்றம் 254

33 ,, வித்துவான் கோ. சி. பெரியசாமிப் புலவர் அவர்கள்
புத்தாண்டு வாழ்த்து 1
மகிழ்ச்சி 2
இந்நாட்டாட்சிக்கு இந்திப் பொதுமொழி
வேண்டுமா? 3, 31
மதிப்புரை 36
கருத்துரைகள் 33, 35, 65, 68, 66, 97, 99, 129,
161, 162, 194, 195, 231, 232

34 ,, இராவ் சாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள், B A.
கரந்தை: கரந்தைப் புலவர் கல்லூரி அறிக்கை 64, 260

35 தமிழாசிரியர் கழகத்தார்—நாமக்கல் தமிழாசிரியர்களின்
தாங்கொணாத் துயரங்கள் 164

36 தமிழறிஞர் கழகம்—சென்னை
தமிழ் மொழிக்கு ஆபத்து 195
தமிழுக்கு வடசொல்லடியாகப் பிறந்த கலைச்
சொற்களா? 196
வேண்டுகோள் 220
கல்விமுறைபற்றிய அறிக்கை 234
கலைச் சொற்களின் சீர்கேடு 238

37 சென்னைப் புலவர் கழகம் சென்னை—முடிபுகள் 243

38 திரு. C. S. இராசப் பிள்ளை அவர்கள்
வடார்க்காடு தமிழ்ப் புலவர் மாநாட்டின் முடிபுகள் 246

39 ,, வித்துவான் V. சண்முகம் அவர்கள், தஞ்சை
தமிழாசிரியர் கழகம் கண்ட முடிபுகள் 249

40 ,, கரந்தைக் கவியரசர் அறுபதாண்டு விழா நிகழ்ச்சி 251

41 ,, அ. கணபதி பிள்ளை அவர்கள்—பொழிற்றொண்டர்
வேண்டுகோள் 253, 324
கருத்துரைகள் 269, 274, 282, 283

42 பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள்,
சமீன்ரூர் கோனூர்—வரவேற்பு நல்லுரை 278

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௨ — விய—சித்திரை 1946—ஏப்பிரல் — மலர் ௧

## புத்தாண்டு வாழ்த்து, வேண்டுகோள்!

தமிழ்த்தாயின் தண்ணருளால், நமது பொழிலின் இருபத்திரண்டாம் துணர் முதன்மலர் இன்று வெளிவருகின்றது. இப்பொழிலின் ஆக்கம் கருதி, உரிமை அன்புடன் கட்டுரைகள் எழுதியும், உறுப்பினராகிப் பொருளுதவி செய்தும் வரும் அன்பர்கட்கெல்லாம் எமது நன்றியறிவினையும் வாழ்த்தினையும் தெரிவிக்கின்றோம்.

உலகத்தே எத்தகைய நிகழ்ச்சிகளும் இடையூறுற்று மெலிந்தும் ஒழிந்தும் பிறழ்ந்தும் நிகழும் இக்காலத்தே, நமது பொழில், தாளின் குறைபாடு முதலாயின எய்தியும், பொழிலன்பர்களது அரிய பெரிய முயற்சிகளின்பயனாக, இடையறாது இயன்ற அளவில் இதன் மலர்களை அளித்து வரலாயிற்று. காலத்தின் கடுமை இந்நாளில் நீங்கிவரலின், அண்மையில், நமது பொழிலின் மலர்கள், தாம் எய்தலாகும் ஆக்கமெலாம் இயைந்து தோன்றுமென்பதைப் பொழில் அன்பர்கட்கு மகிழ்வுடன் கூறுகின்றோம்.

நமது பொழில், வெறும் ஊதியம் ஒன்றே கருதி வெளிவருவதன்று. தாய்மொழியின் பல்வகைச் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டி, மக்கட்கு மொழிப்பற்று, மொழிப்புலமை உண்டாக்குவதும், பலவகையான புத்தாக்கங்களால், தாய்மொழிக்குப் புதிய சிறப்புக்கள் இணைப்பதும் போன்ற உயர் கருத்துக்களுடன் தோன்றிய இது, சென்ற இருபத்தொன்றாண்டுகளாக அவ்விரு வகையிலும் செய்து வரும் தொண்டுகளை அறிஞர் உலகம் அறிந்து பாராட்டி வருகின்றது.

பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களிலும், பிற்காலத்து நூல்களிலும் காணலாகும் மக்கள் வழக்க ஒழுக்கங்கள், வரலாறுகள், கலையுணர்ச்சிகள், நாற்பொருட் பயன்கள் முதலாய பற்பல பொருள்களைப்பற்றிய இனிய எளிய கட்டுரைகளை, நம் பொழில் ஏற்று, மக்கட்கு அத்தகைய உணர்ச்சிகளால் எய்தும் மொழிப் புலமையை வளர்த்து வந்துளது. வேற்றுமொழிகளிற் காணலாகும் அரும்பொருள்கள் பலவற்றை, எளிய இனிய தமிழ்க் கட்டுரைகளால் வெளியிட்டுத், தாய் மொழிக்குப் புத்தணித் தொண்டுகளும் செய்து வந்துளது.

இன்னனைய தொண்டுகளில், இது முழுவளர்ச்சியும் உற்று, நிறைவளம்பெறுதற்குக் கட்டுரை அளித்துவரும் திருவாளர்கள், இன்னும் கிளர்ச்சியுற்றெழுந்து, தாம்தாம் அரிய கட்டுரைகள் எழுதித் திங்கடோறும் அளித்து வருதல்வேண்டும். பொருள் உதவிசெய்யும் திருவாளர்கள், தம்மைப்போன்று தமது அன்பர்கள் எல்லோரையும் பொழில் உறுப்பினராக்கிப் பொழிலை மேலும் மேலும் வளம்படுத்தல்வேண்டும். நம் பொழில் இத்தகைய வளம் பெற்றுத் திகழும்நிலை அண்மியதென நாம் மகிழ்தற்குரிய நற் செய்திகள், நமதுசங்கத்தின் பேரன்பர், திருவொற்றியூர்ப் பெருங் கொடையாளர், உயர்திரு. த. ப. இராமசாமி பிள்ளையவர்கள் அருட் பெருங்கொடையும், அது பற்றுக்கோடாகக்கொண்டு சங்கப் பேரன்பர்கள் ஏனைத் தமிழ்ப்பெருஞ் செல்வர்கள்பாற் சென்று பெருங்கொடை எய்தி வரும் பெருமுயற்சியினை மேற்கொண்டிருப் பதுமாகும்.

பொழில் அன்பர்கள் தத்தம் ஆண்டுவரியினை உடன் அனுப் பியோ, இம்மாத இறுதியில்வரும் வி. பி. பி. யினைப் பெற்றோ, பொழிலைப் புரந்து வருதலுடன், தத்தம் அன்பர்களையும் இதன் உறுப்பினராக ஆக்கித்தர வேண்டுகின்றோம்.

கட்டுரை அருளிவரும் புலவர்கள், தங்கள் பேரருளைவளர்த்து வரவும், தத்தம் அன்பர்களை வேண்டி அரிய கட்டுரைகளை வழங் கச் செய்யவும் வேண்டுகின்றோம்.

---

## மகிழ்ச்சி

நம் சங்கப் பேரன்பரும், சங்கத் தலைவர் முத்தமிழ் வள்ளல் இராவுபகதூர் A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்களின் தம்பியும் ஆகிய திருவாளர் A. Y. S. பரிசுத்த நாடார் அவர்கள் சென்னைச் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமைகண்டு மிக்க மகிழ் வெய்துகின்றோம். திரு. பரிசுத்தநாடார் அவர்கள் தஞ்சைமாவட்டக் கத்தோலிக்க சங்கத்தலைவராகவும், இம்மாவட்டச் சாரணர் இயக்கத் தலைவராகவும், தஞ்சை நிலைப்பு நிதியின் பொறுப்பாளருள் ஒருவ ராகவும், சென்னைமண்டிலக் கத்தோலிக்க சங்க ஆட்சியாளருள் ஒருவ ராகவும் தஞ்சை நகரமன்ற உறுப்பினராகவும் விளங்கிப் பலஅரசியல் கட்சித் தலைவர்களோடும், பல நிறுவனங்களோடும், தொடர்பு கொண்டு, சிறந்த அரசியற் பயிற்சியும், முதிர்ந்த உலகியல் அறிவும் நுண்ணிய நூலறிவும் பெற்றுத் திகழ்கின்றார்கள். இவ்வறிவையும் பயிற்சியையுந் துணையாகக் கொண்டு முற்காலத்தில் நம் சங்கப்பேரன் பர் சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்கள் சிறந்த நாவன்மையுடன் சென்னைச் சட்டசபையில் தமிழ் மொழிக்காகவும், தமிழர்கட்காகவும் போராடிப் புகழ்கொண்டாற்போல இவர்களும் நாவன்மையுடன் போராடிப் புகழ்கொள்ளவேண்டுமென வேண்டுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

## இந்நாட்டாட்சிக்கு
# இந்திப்பொதுமொழி வேண்டுமா?

கோ. சி. பெரியசாமிப்புலவர், பொழிலாசிரியர்.

தமிழ் நாட்டிலுள்ள மக்கள் வடநாட்டு மொழியாகிய இந்தியை இந் நாட்டின் பொது மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அங்ஙனம் ஏற்றுக்கொண்டால் மொழியின் வழியே வடநாட்டினரும் தென்னாட்டினரும் ஒன்றுபட்டு ஓரரசியலை வகுத்துக்கொண்டு வேறுபாடின்றி ஒற்றுமையாக இந் நாட்டில் வாழலாமெனவும் அரசியற் றலைவர்கள் அறிவித்து வந்தனர்; வருகின்றனர். அவர்கள் அறிவிப்பினை உளத்துட்கொண்ட அவர்களின், தொண்டர்கள் தமிழகம் எங்கும் சென்று இந்நாட்டு மக்கள் 'இந்தி மொழியைப்' பொது மொழியாக ஏற்றுக்கொண்டு பயில வேண்டுமெனவும், பயின்றால் பன்னலமும் பெறலாமெனவும் பறைசாற்றி வந்தனர்; வருகின்றனர். வடநாட்டு முதலாளிகள் தங்கள் தாய்மொழியாகிய 'இந்தி'யைத் தென்னாட்டினரிடை நுழைத்து நம் மக்களை 'இந்தி' மொழிக்கு அடிமைப்படுத்துவான் வேண்டித் தங்கள் பொருளைப் பொருளாகப் பொருட்படுத்தாது வாரி இறைத்து வட நாட்டினின்றும் 'இந்திச்' சொற்பொழிவாளர்களையும், 'இந்தி' மொழிபயின்ற ஆசிரியர்களையும் தென்னாட்டிற்கு அனுப்பி, இந் நாட்டிலுள்ள ஒரு பகுதியினரைத் தமக்குத் துணையாகக்கொண்டு, இந்நாட்டில் ஆங்காங்கு 'இந்திப்' பள்ளிக்கூடங்களை நாட்டி, நம் மக்களை அப் பள்ளியில் சேர்த்துப் பயிற்றுவிக்க வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இடைவிடாமல் இந்தியைப் பரப்ப முயற்சித்து வந்துள்ளனர். இவர்கள் முயற்சி தமிழ் நாட்டில் ஓரளவு வெற்றி பெறுதலைக் கண்ட தமிழறிஞர்கள் இது குறித்துத் 'தங்கள் கருத்து என்ன' என எழுதி வற்புறுத்தி எம்மை வினவுகின்றனர். அங்ஙனம் வற்புறுத்தும் அறிஞர்களும் தமிழக மக்களும் அறிந்து கொள்வான் வேண்டி 'இந்தி'யைப் பற்றிய சில வரலாற்று நிகழ்ச்சிகளையும், 'பொதுமொழி'யால் மக்கள் ஆட்சியில் ஒன்றுபடவில்லை என்பதனையும் விளக்கி இக்கட்டுரையை வரைகின்றேம். தமிழறிஞர் இச்செய்திகளை உளத்துட்கொண்டு தமிழக மக்களை விழிப்புறச் செய்து தம் தாய்மொழியைப் பேணும் தகைமைசால் பணியில் தலைப்படுவார்களாக!

### 'இந்தி'ப் பொதுமொழி ஏன்?

திரு. கே. எம். முன்ஷி அவர்கள் இந்திமொழியிற் பயிற்சியில்லாத ஒருவனுக்கு இந்நாட்டின் பொதுவாழ்வில் இடம் இல்லையென இறுமாந்து கூறுகின்றார்; 'இராசகுமாரி அமிர்தகௌரி' அவர்கள் "இந்நாட்டிற்கென ஒருபொதுமொழி யில்லாவிட்டால் இந்நாட்டிற்குத் தன் மதிப்பு என்பதே இரா"தெனக் கூறியுள்ளார். பெரியார் காந்தியாரும் இங்ஙனமே பல்லாற்றானும் வற்புறுத்தி இந்நாட்டு

மக்கள் 'இந்தி' மொழியைப் பயில வேண்டுமெனக் கூறியுள்ளார். அவரால் அரசியல் விடுதலை கிடைக்குமென எண்ணி மக்கள் அவரைப் போற்றுகின்றனரேயன்றி, அரசியல் முழக்கின்வழியே பிற மொழிக்கு நம்மை அடிமைப் படுத்துகின்ருர் என்பதை நம் மக்கள் அறிந்தார் அல்லர்; இங்ஙனம் அறியா மக்களைப் பிறமொழிக்கு அடிமையாக்க எண்ணும் அவர் எண்ணத்தினைத் தமிழறிஞர்கள் வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென வேண்டுகின்றேம்.

## ஆட்சியும் மொழியும்.

பாரசீக நாட்டினர் ஓரைந்நூறு அறுநூறு ஆண்டுகள் ஒரு பொது மொழியின்றி நாட்டாட்சியை நன்கு நடத்தவில்லையா? உரோமப் பேரரசு (ரோம சாம்ராஜ்யம்) எத்துணையோ ஆண்டுகள் ஒரு பொது மொழியின்றி நாட்டாட்சியை நன்கு நடத்திப் புகழ் கொள்ள வில்லையா? பண்டைக் காலத்தில் நிகழ்ந்த பாரசீக நாட்டாட்சியையும் உரோம நாட்டாட்சியையும், இக்கால அரசியற்கு ஏற்புடைத்தாகக் காட்டல் ஏலாதெனின், இதுபோதும் விடுதலைக்காகப் போராடி வென்றிகண்ட சீன நாட்டினரின், ஆட்சி எவ்வாறு நடைபெறுகின்றது? நம் இந்தியாவைப் போன்று, பல மண்டிலங்களைக் கொண்டு திகழும் சீன நாட்டில் 'மஞ்சூரியா'வில் ஒரு மொழியும், 'மங்கோலியா'வில் ஒரு மொழியும் பேசப்பட்டும், அவர்கள் ஆட்சியை ஒழுங்குற நிகழ்த்தி உள் நாட்டிற் குழப்ப மிருப்பினும் உரிமைக்காகப் போராடி வென்றி பெறவில்லையா? மக்கட்டலைமையை (ஜனநாயகத்தை) அடிப்படையாகக் கொண்டு, சிறப்புற ஆட்சி புரியும் கானடா நாட்டைப் பாருங்கள்! கானடாவில் உள்ளவர்கள் ஒரே மொழி பேசுகின்றனரா? கானடா நாட்டிலுள்ள மக்களுள் ஒரு பகுதியினர் பிரெஞ்சு மொழி பேசுகின்றனர்; மற்றெரு பகுதியிலுள்ளார் ஆங்கில மொழி பேசுகின்றனர். இங்ஙனம் இருவகை மொழி பேசுகின்ற மக்களைக் கொண்ட கானடா நாட்டில் இருவகை மொழியையும் அரசியல் மொழியாகக் கொண்டு ஆட்சி ஒழுங்குற நிகழவில்லையா?

அண்மையில் உருப்பெற்ற பொதுவுடைமை உருசியாவைப் பாருங்கள்! அங்குள்ள மக்களெல்லாம் ஒரு மொழியே பேசுகின்றனரா? பன்மொழியன்றே பேசுகின்றனர். மேற் குறிப்பிட்ட நாடுகளில் உள்ள ஆட்சியாளர்கள் ஒரு பொது மொழியை மக்களிடையே புகுத்தி அம் மொழிக்கு மக்கள் அடிமையாலுல் தான் ஆட்சி ஒழுங்குற நிகழும் என அவ்வந்நாட்டு மக்களை அவர்கள் அடக்கி ஆண்டார்கள் என யாம் கேள்விப் பட்டோமில்லை. இங்ஙனமிருக்கவும் இந் நாட்டு அரசியல் தலைவர்கள் வரலாற்றறிவிற்கு முற்றிலும் மாறுபட்டு, தாம் விரும்பிய ஒரு மொழியின் வழியே ஆட்சியை நடத்துவே மெனவும், அம் மொழிக்கு எல்லா மக்களும் அடிமைப்பட்டுக் கற்றே ஆக வேண்டுமெனவும் வற்புறுத்தல் எத்துணைப் பேதைமை என்பதனை எண்ணிப் பாருங்கள்!

## பன்மொழிகொண்ட ஆட்சிநாடுகள்.

'சுவிட்சர்லாந்து' நாட்டிலுள்ள மக்களுள் ஒரு பகுதியினர் செருமானிய மொழியினையும், ஒருபகுதியிலுள்ளார் பிரெஞ்சு மொழியினையும், ஒரு பகுதியிலுள்ளார் இத்தாலி மொழியினையும் பேசி வருதலை உணர்ந்த அந்நாட்டு ஆட்சியினர், பொதுமக்களால் பேசப்பெறும் மொழியினையும், அவர்கள் அம்மொழிமாட்டுக்கொண்டுள்ள உணர்ச்சியினையும் மதித்து அம்மொழிகளனைத்தையும் அரசியல்மொழிகளாக ஏற்றுக் கொண்டார்களேயன்றி, இந்நாட்டு அரசியற் றலைவர்கள் கூறுகின்றாற்போல, 'யாங்கள் ஒரு மொழியைத்தான் அரசியல் மொழியாக ஏற்படுத்துவோம்; நீவிர்அம்மொழிக்கு அடிமைப்பட்டுக் கற்றேயாகவேண்டும்' என அந்நாட்டு மக்களை வற்புறுத்தினரில்லை. 'கானடா', 'உருசியா', 'பெல்ஜியம்', 'தென்னாப்பிரிக்கா', முதலியநாடுகளிலெல்லாம் அவ்வந்நாட்டு மக்கள் பேசுகின்ற பலமொழிகளும் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பெற்று ஆட்சி பாங்குற நிகழ்ந்து வருதலைக் கண்டுவைத்தும், இந்நாட்டு அரசியற் றலைவர்கள், 'யாம் 'இந்தி' மொழியைத் தான் அரசியல் பொதுமொழியாக அமைப்போம்' என இறுமாந்து கூறுகின்றனர்; இவர்கள் கூறும் இறுமாப்புரைகளை இந் நாட்டு மக்கள் எண்ணிப் பார்ப்பார்களாக!

## இந்திமொழியின் வரலாறு.

மகம்மதிய மதத்தவரான மொகலாய மன்னர்கள் வடநாட்டின் மேல் படையெடுத்துஅங்குள்ளவர்களைவென்று, தில்லிமாநகரைத்தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தியபோது, தில்லிமா நகரிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பிராகிருதச் சிதைவான, ஒருவகைத் திரிபு மொழி 'இந்தி' என்ற பெயருடன் வட நாட்டில் வழங்கிவந்தது. அம்மொழி பேச்சு வழக்கில் இருந்ததே அன்றி நூல்வழக்கிற் சிறிதும் இடம் பெறவில்லை. என்னெனின்? அது நாகரிகமில்லாத மக்களால், பேசப்பட்டுப் பற்பல மாறுதல்கள் அடைந்த வண்ணமாய் நடைபெற்று வந்ததாதலானும், அறிவுடையோர்தோன்றி, அம்மொழியைச் சீர்திருத்தி எழுத்துக்களை உண்டாக்கி, இலக்கண இலக்கிய நூல்களையும் உண்டாக்கி, எழுத்து வடிவில் அதனை நிலைபெறுத்தி வையாததனாலும் அதற்கு அந்நாளில் நூல் வழக்கு இல்லாது போயிற்று. மகம்மதிய அரசு, தில்லிமா நகரில் நிலைபெற்றபின் அவ்வரசு கொணர்ந்த அராபிய, பாரசீக மொழிச்சொற்கள் ஈண்டுப்பிராகிருத மொழியினின்று சிதைந்து வழங்கிய 'இந்தி' மொழியோடு கலந்து ஒரு புதுத் தோற்றங்கொண்டு உருதுமொழி எனும் பெயருடன் ஒரு புது மொழி தோன்றலாயிற்று. 'உருது' என்ற சொற்குக் 'கடைத்தெரு மொழி' அல்லது 'பாசறைமொழி' எனப்பொருளாம். அரேபியாவிலிருந்து 'இந்தி'ய, வட நாட்டின்மேல் படையெடுத்து வந்து, வட நாட்டில், பாசறையில் தங்கியிருந்த படை வீரர்கள் ஆண்டு வாழ்ந்த மக்கள் வழங்கிய சொற்களோடு தங்கள் தாய்மொழியாகிய அராபிய

மொழிச் சொற்களைக் கலந்து பேசினமையால் உண்டாய ஒரு கலவை மொழிக்கு 'உருது' என்று பெயரிட்டனர். 'உருது' 'இந்தி' 'இந்துஸ்தானி' என்பவை ஒரேமொழிக்கு வழங்கும் மூன்று பெயர்கள் என்பார் கூற்று ஆராய்தற் குரியதாம்.

கி. பி. 14-ஆம் நூற்ருண்டிலே 'நவாபு குஸ்ரோ' 'இந்தி' மொழியைக் கையாண்டு வந்தார்; 'ஷாஜஹான்' என்னும் மகம்மதிய மன்னனின் ஆட்சிக் காலத்தில் 'பரிஷ்தா' என்னும் பெயரைக் கொண்ட வரலாற்றறிஞர் இவ்'விந்தி' மொழிக்கு 'இந்துஸ்தானி' எனப்பெயரிட்டார் என்று வரலாற்றறிஞர் கூறுகின்றனர். 'உருது', 'அரபி' எழுத்துக்களால் எழுதப்படும் மொழி. 'பார்சி' மொழிச் சொற்கள், 'உருது'வில்கலந்து வழங்குகின்றன. தமிழனின்றும் மலையாளமொழி தோன்றினுற் போல அரபி மொழியிலிருந்து உண்டாய மொழி, 'பார்சி'மொழியாகும். 'உருது' மொழியும், 'பார்சி, மொழியும், அரபி மொழியிலிருந்து தோன்றிய மொழிகளாய், இந் நாட்டுப் 'பிராகிருதச்' சிதைவுச் சொற்களையும் தம் முட்கொண்டு வழங்கி வருகின்ற மொழிகளாகும். முதன் மொழியாகிய அரபி மொழி எழுத்திலுள்ள சில கோடுகளையும், சில குறியீடுகளையும் நீக்கிவிட்டு, 'அரபி' எழுத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் மொழிகளே 'உருது' மொழியும் 'பார்சி' மொழியுமாகும். இவற்றுள் வேறுபாடு என்னெனின்? 'அரபி' மொழியினின்றும் தோன்றிய 'பார்சி' மொழியானது தமிழிற்ருேன்றிய மலையாளம் தனிமொழியாய் வழங்கி வருகின்ருற் போல வழங்கி வருகின்றதென அறிஞரால் மதிக்கப் பெறுகின்றது. தமிழும் மலையாளமும் போல; 'பார்சி'யும் 'அரபி' யும் வழங்கி வருகின்றது எனக் கொள்ளலாம். தமிழிற் ருேன்றிய தெலுங்கு மொழி, பிற மொழிச் சொற்களை மிகுதியும் ஏற்று மாறுபாடடைந்தாற் போல, 'அரபி'யிலிருந்து தோன்றிய 'உருது' மொழி மாறுபாடடைந்துளது. தமிழிற்கும் தெலுங்கிற்குமுள்ள வேறுபாடு போல, 'அரபி' மொழிக்கும், 'உருது' மொழிக்கும், பல வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. 'அரேபி'யாவிலிருந்து இந் நாட்டிற்கு வந்து, இந் நாட்டைக் கைப்பற்றி அரசாண்ட மகம்மதிய அரசர்கள், அவர்கள் ஆட்சிக்குத் துணையான வீரர்கள், இந் நாட்டு மக்களை ஆட்சி புரியவும், ஆட்சி முறையிற் கலந்து பேசவும் முற்பட்ட காலத்து அம் முறையிற் ருேன்றிய மொழியே 'பர்சியன்' மொழி அல்லது 'பார்சி' மொழி எனப் பெயர் பெறலாயிற்று. எனவே, அரசியல் முறையால், விளைவால் எழுந்த மொழியே 'பார்சி' மொழி என்னலாம். 'உருது' மொழியின் தோற்றம் மேலே கூறப்பட்டது ஆயினும், அரேபியா நாட்டுப் போர் வீரர்கள், இந் நாட்டுக் கடைத்தெருவில் பொருள்களை வாங்கச் சென்று, இந் நாட்டு மக்களிடம் தங்கள் தாய் மொழியையும் கலந்து பேசியபோது, அக் கலப்பினுல் எழுந்த மொழியே 'உருது' எனப் பெயர் பெறலாயிற்று என்பதனை யாம் உணர வேண்டும். இதனுலேயே 'உருது' என்ற சொற்குக் 'கடைத்தெரு மொழி' என, மேலே யாம் பொருள் கொண்டோம்.

'உருது' மொழியும் 'பார்சி' மொழியும் தோன்றிய வரலாறு இவ்வளவென்று சுருங்கக் கொள்ளலாம். இம்மொழிகளின் வரலாறு இங்ஙனமாகவும், வடநாட்டில் பல்வேறுமொழியினராகப் பிரிந்துள்ள 'இந்து'க்களுள், சிலர் 'இந்தி' மொழியில் 'பார்சி' மொழிச் சொற்களை யும் 'உருது' மொழிச் சொற்களையும் கலந்து வழங்குதலை வெறுத்து மறுத்து வருகின்றனர். மகம்மதியர்களுட் பலர் வடமொழிச் (சமஸ் கிருத) சொற்களைப் 'பார்சி' 'உருது' மொழிகளிடையே கலந்துவழங்கு தலைவெறுத்து மறுத்துவருகின்றனர். தன்பால் உள்ள உருதுமொழிச் சொற்களை அறவே நீக்கிவிட்டுத் தனித்தியங்கும் ஆற்றல் இல்லாதது 'இந்தி' மொழியாகும். ஆனால் உருதுமொழியோவெனின் தன் பாலுள்ள இந்திமொழிச் சொற்களையெல்லாம் அறவே நீக்கிவிட்டுத் தனித்தியங்கும் ஆற்றல் உடையது.

தன்பாலுள்ள உருது மொழிச் சொற்களை யெல்லாம் நீக்கி விட்டுத், தனித்தியங்கவும் செழித்தோங்கவும் வன்மையற்ற 'இந்தி' மொழியின் தன்மையை உணர்ந்த வடநாட்டு முதலாளிகள், மேற் கூறிய மாறுபட்ட கருத்துடைய இரு சார்பாயுள்ள மக்களைத் தம் பக்கல் இழுக்க எண்ணி, 'இந்துஸ்தானி இயக்கம்' என ஒரு கலவை மொழி இயக்கத்தைத் தோற்றுவித்து, அம் மொழிக்கு இரு சார்பா யுள்ள மக்களையும் அடிமைப்படுத்த எண்ணுகின்றனர். இவையே யன்றியும் இந் நாட்டு மகம்மதியர், தங்கட்கெனத் தனி மொழி உண் டெனவும், தனிக்கலை உண்டெனவும், தனிமதக்கொள்கை உடையேம் எனவும், 'யாங்கள் பிரிந்து நிற்போம்' எனவும், கூறி வருகின்றனர்.

இங்ஙனம்கூறும் மகம்மதியருடைய தனிக்கலைப் பண்பாட்டையும் (Culture) 'தனி இனம்' என்ற கொள்கையையும் அழித்து, அம் மகம் மதியர்களையும் 'இந்து'க்களுடன் ஒன்றாக இணைக்க வேண்டுமென எண்ணிய வடநாட்டு அரசியல் தலைவர்கள், இந்துக்களும் மகம்மதியர் களும் ஏற்றுக்கொள்ளும் முறையில் வடநாட்டில் இவ்விருசாராரும் பேசிவரும் இருவகை மொழிக்கும் பொதுவாயமைந்த ஒரு பொது மொழியை ஏற்படுத்துவதே நல்லமுறை என எண்ணினர். பார்சி மொழி எழுத்தில் எழுதப்பெற்று, ஒலிக்கப்பெறும் 'உருது'மொழியை விரும்பும் மகம்மதியர்களையும், வடமொழிச்சொற்கள் மிகுதியுங்கலந்த இந்திமொழியிற் பற்றுக்கொண்ட 'இந்து'க் களையும் ஒன்று கூட்டு வான்வேண்டி, நீங்கள் வேண்டுமேல், உங்கட்கு விருப்பமான 'உருது' மொழி எழுத்துக்களில் 'இந்துஸ்தானியை' எழுதிக் கொள்ளுங்கள் என மகம்மதியர்கட்குக் கூறியும், நீங்கள் வேண்டுமேல் உங்கட்கு விருப்பமான தேவநாகரி எழுத்துக்களில் இந்துஸ்தானியை எழுதிக் கொள்ளுங்கள் என 'இந்து'க்களுக்குக் கூறியும், மாறுபட்ட அவ்விரு சாராரையும் ஒன்றாக்க முயற்சிக்கின்றனர்.

'பாபு தாண்டனின்' முயற்சியால், தன்னாட்சிமன்றம், 'இந்துஸ் தானி' என்பது வட இந்தியாவில் சிற்றூர்களிலுள்ள 'இந்து'க் களாலும், மகம்மதியர்களாலும், பேசப்பட்டுத், 'தேவநாகரி' எழுத்து அல்லது 'உருது' எழுத்துக்களால் எழுதப்பெறும் மொழி' எனவிளம்

பரம் செய்தது. இவ்விளம்பரத்தை மதியாது, வடநாட்டில் 'உருது' மொழிப் பற்றுள்ள மகம்மதியர்களும், 'இந்தி' மொழிப் பற்றுள்ள இந்துக்களும், தத்தம் பழக்க வழக்க வழியே ஒழுகுகின்றனர்.

கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் 'இந்துஸ்தானி' மொழி தோன்றிய தெனவும், 'இந்துஸ்தானி'யுடன் சில 'அராபிய' மொழிச் சொற்களும், 'பாரசிக' மொழிச் சொற்களுங் கலந்து 'உருது'மொழி உண்டாயிற் றெனவும் அறிஞர் கூறுகின்றனர். உருது எழுத்தினுலும், தேவ நாகரி எழுத்தினுலும் எழுதப்பெற்று உருது தன்மையிலும் இந்தி தன்மையிலும் பேசி வழக்கியலில் வழங்கப்பெற்று வரும் ஒருவகைக் கலவை மொழியே இந்துஸ்தானி மொழியாகுமெனவும், இத்தகு மொழியே இந்தியப் பொதுமொழியாக வேண்டுமெனவும் பெரி யார், காந்தியார் கூறுகின்றுர்கள். மேலும் அவர் 'தேவநாகரி' எழுத்தில் எழுதப்படும் இந்துஸ்தானி மொழி தனித்து நாட்டுப் பொதுமொழி ஆகாதெனவும், அதைப் போலவே, 'பார்சி' எழுத் தில் எழுதப்பெறும் 'உருது' மொழியும் தனிப்பட்டு நின்று நாட் டுப் பொதுமொழி ஆகாதெனவும் இருமொழி எழுத்துக்களையும் ('பார்சி' எழுத்து 'தேவநாகரி' எழுத்து) அறிந்து இருவகை எழுத்துக்களிலும் எழுதப்பெற்று இருதன்மையிலும் அம்மொழியைப் பயன் படுத்த மக்கட்குத் தெரிந்தால் தான் உண்மையான 'இந்துஸ் தானி' மொழி உண்டாகும் எனவுங் கூறுகின்றுர்கள். 'இந்தி' மொழியைத், 'தேவநாகரி' எழுத்திலேயே எழுத வேண்டுமென 'இந்து'க்கள் வற்புறுத்துகின்றனர். 'இந்தி' மொழியைப் 'பார்சி' எழுத்துக்களிலேயே எழுதவேண்டுமென மகம்மதியர்கள் வற்புறுத்து கின்றனர். இவ்விருசாராரையும் ஒன்று படுத்த இயலும் எனக் கருதிய பெரியார் காந்தியார் இவ்வாறு கூறுகின்றனர். இவ் 'விந்துஸ்தானி' எனும் ஒரு மொழியைப் 'பார்சி' எழுத்திலும், 'தேவநாகரி' எழுத்திலும் எழுதிப் பழகிக்கொண்டு அவ்விரு மொழித் தன்மையிலும் அம் மொழியைப் பேச வேண்டுமேல் அஃது எத்துணை அருமைப்பாடுடைய செயல் என்பதனை அறிஞர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுகின்றேம். இவ் வருமைப்பாட்டை ஆராய்ந்த வடநாட்டுத் தலைவர்கள் 'இந்தி'க்கும், 'உருது'விற்கும் நூற்றுக்கு எண்பது சொற்கள் பொதுவானவை யெனவும், எஞ்சிய இருபது சொற்களை இரு மொழிகளிலிருந்தும் எடுத்துக் கொள்ள லாம் எனவும், இவ்வாறு எடுத்துக்கொண்டு வேறுபாடின்றி மொழி வகையில் 'இந்து'க்களும், மகம்மதியர்களும் ஒரு பொதுமொழியால் ஒன்றுக ஒருப்பட்டு விட்டால் 'இந்தி'க்கும் 'உருது'விற்கும் பொதுவான சொற்களைத் திரட்டி, ஒரு பொதுமொழியை உண்டாக்கி விடலாம் எனவும், இப் பொதுமொழியே எதிர்கால இந்திய அரசியல் மொழியாகத் திகழும் எனவும், இப் பொதுமொழியைத் தென்னுட்ட வருந் தலை வணங்கிக் கற்றே ஆக வேண்டும் எனவும், கூறி ஆர வாரிக்கின்றனர். 'இந்துஸ்தானி' மொழியின் எழுத்தைக் குறித்தும்

(இதன் தொடர்ச்சி 31-ம் பக்கம் பார்க்க)

# சிலப்பதிகாரம்

வித்துவான். ப. பழனி முதலியார் அவர்கள், கரந்தை.

சிலப்பதிகாரம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். இவ்வரலாறு சிலம்பு காரணமாக எழுந்ததாகலின் சிலப்பதிகாரம் என்னும் பெயரினதாயிற்று. இந் நூல், இயலிசை நாடகம் என்னும் முத்தமிழும் தன்னகத்தே நிலவ நிற்பது. இளங்கோவடிகள், அரசன் நீதி தவறின் அவனை அறமே கூற்றாய் நின்று கொல்லுமென்பதும், கற்புக் கடம் பூண்ட பொற்புடை மாதரை உலகம் ஏத்து மென்பதும், ஊழ் வினையானது விடாது தொடர்ந்து வந்து பயனை நுகர்விக்கு மென்பதும் உணர்த்த வேண்டி, சிலம்பு காரணமாக எழுந்த இவ்வரலாற்றை உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளிலே பாடித்தந்தார். இந் நூலைத் தமிழன்னையின் சிலம்பாகப் பிற்காலப்புலவர் ஒருவர் பாடியுள்ளார். இந்நூல், ஊன்றிக் கற்போர் அறிவிற்கேற்பப் பற்பல புதிய கருத்துக்களைத் தோற்றுவிப்பது. யாமும் ஈண்டு இந்நூலைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

இந்நூல், மங்கல வாழ்த்துப் பாடல் முதலாக வரந்தரு காதை ஈறாக முப்பது காதைகளை யுடையது. இவ்வாசிரியர் மங்கல வாழ்த்துப் பாடலிலே திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் ஆகிய இந்நான்கையும் போற்றியுள்ளார். திங்கள் கரிகாலனுடைய குடைபோல் தண்ணொளி சொரிதலானும், ஞாயிறு கரிகாலனுடைய ஆணைச் சக்கரம் போல மேருவை வலம்வருதலானும், மழை, அவன் குடிகளுக்குத் தண்ணளி செய்வது போல அருள்சுரத்தலானும், கரிகாலனைப் புகழ்வார் பூம்புகாரைப் புகழ்தல் மரபாகலானும் நூலின் தொடக்கத்திலே அவைகளைப் போற்றுவாராயினர். அக்கால முறைப்படி மணம் நிகழ்ந்த முறைமை மங்கல வாழ்த்துப் பாடலால் அறியக்கிடக்கின்றது. இயற்கை நலன் நிறைந்த மகளிர் காவலனைப் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் "தீதறுக"வென ஏத்துகின்றனர். அங்ஙனம் ஏத்துங்காலைச் "சினமிகு வேலையுடைய செம்பியன் தன்திகிரியை எஞ்ஞான்றுஞ் செலுத்துவோனாக!" என்று அரசனையும் வாழ்த்துகின்றனர்.

மனையறம் படுத்த காதையிலே கோவலனும் கண்ணகியும் தனித்து இல்லறம் நடத்தியது கூறப்படுகின்றது. இக்காதையிலே வரும் "மாசறு பொன்னே வலம்புரிமுத்தே, காசறுவிரையே கரும்பே தேனே" என்னும் அடிகளால், கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்" அவள் கண்ணே ஆர அனுபவித்ததை உணர்த்துகின்றான். "மறப்பருங் கேண்மையோடு அறப்பரிசாரமும், விருந்து புறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும், வேறுபடு திருவின் வீறுபெறக் காண" என்பதனால் இல்லறம் நடாத்தும் முறைமையைத் தெரிந்து

கொள்ளுதற் பொருட்டுத் தாய் தந்தையர் இவர்களைத் தனித்து இல்லறம் நடத்தும்படிச் செய்தனர் என்பது பெறப்படுகின்றது.

அரங்கேற்று காதையிலே,மாதவியானவள் ஐந்தாண்டு தொடங்கித் தான் பயின்ற நாட்டியக்கலையைத் தன் பன்னிரண்டா மாண்டில் கரிகாலன் முன்புஅரங்கேற்றியது கூறப்படுகின்றது. இதனில் நாடகத்தின் பல்வகை உறுப்புக்கள் கூறப்படுகின்றன. கூத்தின் அமைதி, ஆடலாசியரின் அமைதி, இசையாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமையோன் அமைதி, குழலோன் அமைதி,யாழாசிரியன் அமைதி, அரங்கின் அமைதி, தலைக்கோல் அமைதி, அரங்கிற் புகுந்து ஆடுகின்ற இயல்பு முதலியன தெற்றென விளக்கப்பட்டுள்ளன. இதற்கு அடியார்க்கு நலலார் இயற்றிய உரையால், அக்காலத்தில் நாடகத் தமிழ் நூல்கள் பல இருந்தனவென்பதும், அவை இறந்தனவென்பதும் தெரியவருகின்றன. மாதவியின் மாலையை 1008 பொன் கொடுத்து வாங்கிக் கோவலன் அவளோடு மகிழ்ந்திருந்ததும் கூறப்படுகிறது.

அந்திமாலைச் சிறப்புச்செய் காதையிலே, மாலைக்காலம் வருதலும், அவ்வருகையால் மாதவிபோன்ற கணவனோடு கூடியோர் மகிழ்தலும், கண்ணகி போன்ற காதலர்ப் பிரிந்தோர் வருந்துதலும் கூறப்படுகின்றன. கதிரவன் மறைகின்றான். காரிருள் கவிகின்றது. நிலமடந்தை தன்னுடைய மலராகிய கண்களினின்றும் பனிநீரைச்சொரிகின்றாள். இத்தோற்றம் அரசனை இழந்து துன்புறும் நாட்டினை நினைப்பூட்டுகின்றது. திங்களஞ் செல்வன்வந்து ஒளிவீசி இருளாகிய குறும்பைத் தொலைக்கின்றான். இது அரசனில்லாத காலத்து இடர்செய்த குறும்பரைக் காலஞ்சென்ற அரசனுடையமகன் அரசேற்றுத் தொலைத்ததை ஒத்திருந்தது. இவ்வாறு மாலையின் வருகை சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

இந்திர விழவூரெடுத்த காதையிலே இந்திரனுக்குக் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ளார் விழாவெடுத்துச் சிறப்பித்தது கூறப்படுகின்றது. அக்காலத்திலே மாளிகை அமைத்த முறைகளும், யவனர் முதலியோர் வாணிகத்தின் பொருட்டுவந்து, தங்கியிருந்ததும், பல்வகைத் தொழிலாளர்கள் நிரம்பியிருந்ததும் கூறப்பட்டுள்ளன. "மறுவின்றி விளங்கும் மருவூர்ப்பாக்கமும், பாடல்சால் சிறப்பின் பட்டினப்பாக்கமும்" எனவரூஉம அடிகளால் காவிரிப்பூம்பட்டினம் இருபகுதியாகப் பகுக்கப்பட்டிருந்ததென்பது தெரியவருகின்றது. மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்கும் இடையே உள்ள நிலத்தில் நாளங்காடி நிலைபெற்றிருந்தது. அந்நாளங்காடியிலே பண்டங்கொள்வோர் ஓதையும், கொடுப்போர் ஓதையும் எஞ்ஞான்றும் நிலைபெற்றிருந்தது. அங்கேயுள்ள பலிபீடத்தின் முன்பு சென்று, மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் ஆகிய இரண்டிடத்தும் வீரர்கள் மன்னர்க்குற்ற துன்பத்தை ஒழிப்பாயாக வெனச்சொல்லித் தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்ளுதல் கூறப்படுகின்றது. பெண்டிர்கள், "பசியும் பிணியும்

பகையும் நீங்கி வசியும் வளனுஞ் சுரக்க" என வாழ்த்திப் பெயர் தலும் காணப்படுகின்றது. மேலும் வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல்மன்றம், பூதசதுக்கம், பாவைமன்றம ஆகிய இவை அவ்விரு பட்டினங்களுக்கும் நடுவே இருந்ததென்பதும் தெரிய வரு கின்றது. (அ) வெள்ளிடை மன்றத்திலே தங்களுடைய பொதிகளை வணிகர்கள் இவ்வளவென எழுதி இலாஞ்சினை இட்டு வைத்திருக் கின்றனர். அவ்விடத்திலே கதவும் இல்லை. தாழ்ப்பாளும் இல்லை. காவலர்களும் இல்லை. அப்பொருள்களை ஒருவரும் எடுக்க மாட் டார்கள். புதிதாக வந்தவர்கள் யாரேனும் அம்மன்றத்தின் இயல்பறி யாமல் களவாட நினைத்தால் அவர்கள் தலையிலே அம்மூட்டையை ஏற்றி அவர்கள் தலைகடுக்கச்செய்யும் இயல்புடையது அம்மன்றம் ஆதலின் ஆண்டுள்ளார் யாவரும் களவைக் கனவிலும் கருதார். (ஆ) குறைபாடுடைய பிறப்பினையுடையோரும் நோயுற்றோரும் முழு கினவளவிலே துன்பம் நீக்குவது இலஞ்சிமன்றமாகும், (இ) நஞ்சு முண்டு துயர்உற்றோர், பேயால் பிடிக்கப்பட்டோர் தொழ; அவர்கள் துயரை நீக்கும் இயல்புடையது நெடுங்கல் மன்றம். (ஈ) வேடம்பூண்டு தவமல்லவை செய்வோர், கணவரை விட்டுப் பிறரை நயப்போர், கீழ றுக்கும் அமைச்சர், பிறர் மனை நயப்போர், பொய்க்கரி கூறுவோர் இவர்களைப் புடைத்துண்ணும் இயல்புடையது பூத சதுக்கம். இப் பூதம் இருக்கும் இடத்தில் தீயனவெண்ணவும் ஒல்லுமோ ? (உ) அரசன் தன் நீதி தப்பினும், அறங்கூற வையத்தோர் பிழைப்பினும் தான் கண்ணீர்விட்டு அவற்றை அந்நகரத்தார்க்கு அறிவிக்கும் இயல்பினது பாவைமன்றம், நகரத்தின் இயல்பை நன்கு விளக்குவது இக் காதையாகும்.

கடலாடு காதை கோவலனும் மாதவியும் விழா முடிந்த நாளிலே கடலாடுதற்குச் சென்றதைக் கூறுவது. இக்காதையிலே இறையோன் ஆடலும், திருமால் ஆடலும், முருகன் ஆடலும், துர்க்கை ஆடலும், திருமகள் ஆடலும், அயிராணி ஆடலும் அங்கு நிகழ்ந்தனவெனவும் அதனை விழாக் காணப்போந்த விஞ்சையன் தன் காதலிக்குக் காட்டினன் எனவும் இளங்கோவடிகள் உரைக்கின்றார். மாதவியானவள் தன்னை அலங்கரித்துக் கொண்ட இயல்பு விளங்கு கின்றது. அதில் காணப்படும் அணிகளின் பெயர்கள் பல நமக்குப் புதுமையாகத் தோற்றுகின்றன.

கானல்வரியிலே, மாதவியானவள் யாழைக்கொடுக்கக் கோவலன் வாங்கிக் காதற்சுவை நிரம்பிய பாட்டைப் பாடவும், அதனை வேறாக நினைத்த மாதவி தானும் யாழை வாங்கி வேறொரு குறிப்பினையுடை யாள் போல் யாழ்வாசித்தாள். அதனால் கோவலன் புலந்து அவளைப் பிரிந்து வந்ததும் கூறப்படுகின்றது. கானல்வரியிலே வருங்காதற் சுவை நிறைந்த பாட்டுக்கள் படிப்போர் மனத்தைக் கவருவனவாகும்.

"கரியமலர் நெடுங்கண் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலரென் றேழையம்யாங் கறிகோ மைய

விரிகதிர் வெண்மதியும் மீன்கணமு மாமென்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தங்கண் டாம்பல் பொதியவிழ்க்கும் புகாரே எம்மூர்.

இப்பாட்டின் கருத்து:—தலைவன் தலைவியைத் தனியிடத்துக் கூடினன். கூடுங்காலைத் தலைவன் பிரியேனெனச் சூள் உரைத்தான். பின்னர் சூளுரைதப்பி, தலைவியை விட்டகன்றான். தலைவி கூறுகின்றாள்: இக்கடற்கரையிலே சங்கையும் முத்தையுங்கண்டு மதியும் விண்மீன்களும் என்று நினைத்துக்கொண்டு ஆம்பல் மலர்கின்றது. ஒன்றை மற்றொன்றாக நினைத்து இயற்கைப் பொருள்கள் மயங்குகின்றன. ஆதலின் அத்தகைய இடத்திலுள்ள யாமும் பொய்மை நிரம்பிய தலைவரை மெய்மை யுடையோராக நினைத்தோம். என்னே நம் அறியாமை என இரங்குகின்றாள். தலைவியைவிட்டு, தலைவன் பிரிந்தான். தலைவி வருந்துகின்றாள். வருந்துங்கால் அவள் சொல்லும் வார்த்தைகள் நெஞ்சை உருக்குகின்றன. தலைவி கடற்பொருள்களை விளித்துச் சொல்லுகின்றாள்! அடும்புகளே! அன்னங்களே! தலைவர் என்னை மறந்து விட்டார். அப்படி மறந்தாரை யாம் மறத்தல் ஒல்லுமோ. நினைந்தவுடன் மணந்து, சினந்தவுடன் பிரியும் வாழ்க்கையன்றே இது. இனிமேல் யான் வேறொருவரைக் கனவிலும் நினைத்தல் ஒல்லுமோ? ஆதலின் யான் அவரை நினைந்தே வருந்துகின்றேன் என வரும்பாட்டு இதுவாகும்.

"தம்முடைய தண்ணளியுந் தாமுந் தம்மான்தேரும்
எம்மை நினையாது விட்டனரேல் விட்டகல்க
அம்மெனிணர அடும்புகாள் அன்னங்காள்
எம்மை மறந்தாரை யாம்மறக்க மாட்டேமால்"

வேனிற் காதையிலே, கோவலனைப் பிரிந்த மாதவி வருந்துதலும், வசந்தமாலையைத் தூதாக அனுப்புதலும், கோவலன் அவள் திருமுகத்தை மறுத்துரைத்தலும் ஆகிய இவை கூறப்படுகின்றன. மாதவி வசந்தமாலையிடம் சொல்லிவிட்ட வார்த்தைகளாவன:— காதலர்களைக் கூட்டுவிக்கும் இளவேனிலாகிய இளவரசன் அரசுத் தன்மை முற்றும் கைவந்தவனல்ல. அவன் இளவரசன் ஆதலின் காதலருடன் கூடி மகிழ்வோரை மேலும் மேலும் மகிழ்வித்தலும், பிரிந்து துன்புறுவோரை மேன் மேலும் துன்புறுத்தலும் ஆகிய கோட்டங்கொண்ட மனத்தோன். திங்களஞ் செல்வன் வடிவால் குறைபாடுடையனுயிருத்தல் போல, செய்கையாலும் குறைபாடுடையன். மன்மதன் மலர்க்கணையால் உயிரைக் கொள்கின்றான். இதனை நீங்கள் அறிய வேண்டு மென்பது. இதனை, வசந்தமாலை கொண்டு சென்றாள். கோவலன் ஓலையைக் கண்டு அவள் நாடகமாதாதலின் அவள் இவ்வாறு புனைந்து கூறினள் எனச் சொல்லி வருவதற்கு மறுத்தான். அதனை வசந்தமாலை தெரிவிப்ப, மாதவி, மாலைக் காலம் வாராராயினும் காலையாவது காண்போம் என்று வருந்தி அமளி மிசைத் துயில் வராது துன்புற்றிருந்தனள்.

கனாத்திறம் உரைத்த காதையிலே தேவந்தியானவள் கண்ணகியிடம் வந்து, சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய இரண்டிலும் மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதால் கணவனை யடைவாய் என்ன, அதற்குக் கண்ணகி அது தனக்குப் பீடு அன்றென மறுத்தலும், அவ்வளவிலே கோவலன் வருதலும் கூறப்படுகின்றது. கண்ணகிகண்ட தீக்கனவும் இதனுள் கூறப்படுகின்றது. கண்ணகியை யடைந்த கோவலன் பொருளை எல்லாந் தொலைத்தேன். இலம்பாடு நாணத்தை யுண்டாக்குகின்றது என்று சொல்ல, சிலம்புளது அதனைக் கொள்ளுங்கள் என்று கண்ணகி கொடுப்ப, இதனைக் கொண்டு கெட்ட பொருள் யாவுந் தேடுவேன் எனச் சொல்லி, கண்ணகியோடு விடிவதற்கு முன்னே புறப்பட்டான். 'ஏடலர் கோதாய் எழுகென்று நீடி, வினைக் கடைக்கூட்ட வியங்கொண்டான் கங்குல், கனைசுடர் கால் சியா முன்' என ஆசிரியர் இரங்கிக் கூறுகின்றார்.

நாடுகாண் காதையிலே, கோவலனும் கண்ணகியும் விடியற் காலையிலே புறப்பட்டு உறையூர் போய்ச் சேர்ந்தது கூறப்படுகின்றது. நகரின் எல்லை கடந்தவுடனே கண்ணகி முதிராக் கிளவியின் முள்ளெயிறிலங்க மதுரை மூதூர் யாதென வினவினாள். ஆறைங்காதம் உள்ளது என மனம் மலைப்புறு வண்ணம் கூறினான். காவதமோ, 30 காதமோ எப்படியாவது அவள் கருதிக்கொள்ளட்டும் என்னுங் கருத்தில் கூறினான். கம்பரும் 'ஏழிரண்டாண்டில் வாவென்றேவினன் அரசன் என்றாள்' எனக் கூறியது இத்தகையதே யாகும். கவுந்தியடிகள் கண்ணகியின் மேன்மையை நோக்கி 'பாடகச் சீறடி பரற்பகை உழவா.........எனக் கூறி மேல் வருவனவற்றை ஞானத்தால் உணர்ந்தவளாதலாலும், விதி தடுத்தற்கரிது என்பதை நோக்கி' ஒழிகென ஒழியீர் எனவும் உரைக்கின்றார். மேலும் கவுந்தியடிகள், நெறியின் இயல்பைக் கூறுங்கால் வயலைச் சார்ந்து சென்றால் குவளைப் போதோடு வண்டினமுங் கிடக்கும். அதனை மிதிக்க நேரிடும். நண்டும் நத்தையுங் காலில் மிதிபட்டு இறந்துபடவுங் கூடும். அதனால் வருந் துன்பம் தாங்கொணாது என்று கூறுவதால் சமண நெறியினருடைய அருளுடை நெஞ்சம் புலனாகின்றது. சாரணர் வாய்மொழி கேட்டு, கவுந்தியடிகள் கைகூப்பி 'ஒரு மூன்றவித்தோன் ஓதிய ஞானத் திருமொழிக்கல்லது என் செவியகந் திறவா' என்றும் 'காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு நாமமல்லது நவிலா தென்னா' என்றும் 'அருளறம் பூண்டோன் திருமெய்க்கல்லது பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா' என்றும் கூறியிருப்பதனால் அவருடைய கடவுட் கொள்கையின் மேன்மை புலப்படுகின்றது. வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் கௌந்தியடிகளை நோக்கி இவர்கள் யாவர் என்ன, என் மக்கள் என விடையிறுத்தனர். ஒரு வயிற்றிற் றோன்றியோர் உடன் சேர்ந்து வாழ்க்கை நடத்துதல் ஒல்லுமோ என வினவ, அடிகள் அவர்களைக் குறுநரிகளாகுமாறு சபித்தனர். கோவலனும் கண்ணகியும் அவர்கள் நரிகளானதைக் கண்டு நடுங்கி 'நெறியின் நீங்கியோர் நீரல

கூறினும் அறியாமை யென்றறியல் வேண்டும்' என வேண்டிக் கொள்வது அவருடைய பெருந் தன்மையைக் காட்டுகின்றது. இத்துடன் புகார்க் காண்டம் முடிவுறுகின்றது. புகார்க் காண்டம் இன்பச்சுவையை நுதலி வந்தது. இனி வருவது மதுரைக் காண்டம். இதன் கண் கூறப்படுவது அவலச்சுவை.

காடுகாண் காதையிலே "அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தி, வடிவேலெறிந்த வான்பகை பொறுது, குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்பதனால் குமரி நாடு கடல் கொள்ளப்பட்டது விளங்குகின்றது. மாடலன் என்னும் மாங்காட்டு மறையவன் கோவலன், கண்ணகி கௌந்தியடிகள் ஆகிய மூவரையும் எதிர்ப்படுகின்றான். கோவலன்மாடலனைநோக்கிநும்மூர்யாதென? மாடலன்கூறுகின்றான். யான் மாங்காட்டுள்ளேன். திருமாலின் கிடந்த திருக்கோலத்தையும் என் கண் காட்டுக என்று என்னை வேண்டிற்று. ஆதலின் சென்று வருகின்றேன் என்றான். அவன் திருமாலியல்பை விரித்துக்கூறும்பகுதி அன்பராயினார் படித்தின் புறற்பாலது. "நீலமேகம் நெடும் பொற்குன்றத்துப் பால் விரிந்தகலாது படிந்தது போல...திருவமர் மார்பின் கிடந்த வண்ணமும்" இது கிடந்த திருககோலத்தைப் பற்றியது. "நீரருவி வேங்கட மென்னும், ஓங்குயர் மலையத்துச்சி மீமிசை...... பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்" இது நின்ற திருக்கோலத்தைப்பற்றியது. மாடலன் என்னும் மறையோன் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகளைச் சொல்லி இவைகளில் முழுகினால் முறையே ஐந்திர நூலுணர்ச்சியும், பழம் பிறப்புணர்ச்சியும், நினைத்தவெல்லாம எய்தப்பெருதலும் உண்டாகும் என்றான். அதற்குக் கவுந்தியடிகள் கூறுவன "பிலம்புக வேண்டும் பெற்றி யீங்கில்லை கப்பத்திந்திரன் காட்டிய நூலின், மெய்ப்பாட்டியற்கை விளங்கக் காணாய், இறந்த பிறப்பின் எய்திய எல்லாம், பிறந்த பிறப்பின் காணாயோ நீ, வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு, யாவதும் உண்டோ எய்தா அரும்பொருள்' என்பனவாகும். இவை அவருடைய கடவுட் கொள்கையின் மேன்மையையும், அருட்டன்மையையும் குறிக்கும்.

வேட்டுவ வரியில் கூறப்படுவது:- கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் ஐயைக் கோட்டம் அடைந்தனர். அங்கே குறவர்கள் தெய்வத்திற்குப் பலி கொடுத்து வழி பட்டனர். அப்போது சாலினி என்பவள் ஆவேசமுற்றுக் கண்ணகியை நோக்கி 'இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி, தென் தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து, ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய திருமாமணி' என்றாள். பின்னர் இவள் கொங்கர்களுக் கெல்லாம் வழிபடுந் தெய்வமாவாள். சேரன் பத்தினிக் கடவுளுக்குக் கோட்டம் எடுத்து வழிபடப் போகின்றானாதலின் 'குடமலையாட்டி' என்றாள். இதைக் கேட்ட கண்ணகி நாணுற்று, பெருமூதாட்டி பேதுறவு மொழிந்தனள் என்று

முறுவல் தோன்ற கணவன் முதுகு புறத்து ஒடுங்கி நின்றுள். சாலினி கூறியன நிகழப் போவதை அறியாளாதலின் பேதுறவு மொழிந்தனள் என்றுள்.

புறஞ்சேரி இறுத்த காதை :—ஐயைக்கோட்டத்தினின்றும் மூவரும் புறப்பட்டு, புறஞ்சேரியிற் போய்த் தங்குவதுவரை நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறுவது. கோவலன் கவுந்தியடிகளை வழிபட்டுப் பின் வருமாறு கூறுவானுயினன். இவளுடைய கால்கள் பரல் வெங்கானத்து வேனிற்காலத்துச் செல்லுதற்கு வன்மை யுடையனவல்ல. “செங்கோல் தென்னவன் காக்கும் நாடென, எங்கணும் போகிய இசையோ பெரிதே” ஆதலின் மிருகங்களால் வரும் இடரில்லை. இராப்பொழுது செல்லலாம் என நினைக்கிறேன் என்றுன். கௌந்தியடிகள் உடன்பட, பின்னர் இரவில் செல்கின்றுர்கள். பூமிதேவி கண்ணகியின் துயரத்தைக் கண்டு வருந்துகின்றுள். கண்ணகி! உன்னுடைய மனத் துன்பத்தை யான் சொல்லல் ஒல்லுமோ ? இவ்வளவு நாட்களாகக் கணவனைப் பிரிந்திருந்தாயாகலின் சந்தனமும் பூசப் பெற்றுயில்லை. மலர்மாலையையும் அணிந்தாயில்லை. இரண்டு நாளைக்கு முன்புதான் உன் கணவன் வந்தான். தென்றல் உன்மீது வீசுகின்றது. நிலவானது தன் வெண்கதிரைச் சொரிகின்றது. இக்காலத்திலாயினும் உன் கணவனேடு மகிழ்ச்சியாகப் பேசும் வாய்ப்பைப் பெற்றுயோ ? பக்கத்தில் கௌந்தியடிகள் வருவதனுலே பேசுதற்கு வாய்ப்பை யடைந்தாயில்லை. ஐயோ ! நின் நிலைமை மிகப் பரிதாபகரமானதெனப் பார்மகள் பெருமூச்சு எறிகின்றுள். “புலவர் நாவில் பொருந்திய தென்றலொடு......வேனிற் றிங்களும் வேண்டுதியென்றே பார்மகள் அயாவுயிர்த்து அடங்கிய பின்னர்” எனவரும் அடிகளான் உணர்க. விடியற்காலையில் கண்ணகியையும் கவுந்தியடிகளையும் ஓரிடத்திருத்தி, கோவலன் நீர் கொணரச்சென்றுன். கௌசிகன் என்பவன் மாதவி விடுத்த ஓலையைக் கொணர்ந்து கோவலனுக்குக் காட்டினுன். அவ் வோலையில்,

‘அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்,
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியும் குலப்பிறப் பாட்டியொடு
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சஞ் கடிதல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி’

என எழுதப்பட்டிருந்தது. மாதவி விடுத்த இவ்வோலை கோவலன் தன் தாய்தந்தையர்க்கு விடுத்தற்கும் பொருத்தமா யிருந்ததினுலே அதனைக் கொண்டுபோய்த் தன் தந்தையிடம் சேர்ப்பிக்கும்படி கூறினுன். இருவர்க்கும் பொருந்துமாறு இளங்கோவடிகள் வோலையைச் சித்திரித்துள்ளார். ஓலையைத் தன் தந்தையிடம் சேர்ப்பிக்குமாறு கூறிய பின்னர் கோவலன், கண்ணகியுடனும் கவுந்தியடிகளோடும் வையைக் கரையோடே செல்கின்றுன். வையைத் தன் பக்கத்திலுள்ள மரங்களி

னின்றும் மலர்கள் உதிரப் பெறுவதனுலே நீரே தெரியாமல் மலர் வடிவமாகச்செல்கின்றது. அதனை அடிகள் பின்வருமாறு அழகுபடுத்திக் கூறியுள்ளார். வையை என்னும் பெண்ணுனவள் கண்ணகி கணவனை இழக்கப் போவதை யறிந்து உண்டான துன்பத்தால் வெளிப்படும் கண்ணீரைத் தன்னிடத்தே அடக்கிக் கொண்டவள் போல மலரான் மறைத்துக் கண்டவர் புனல் யாறு அன்று; இது பூம் புனல் யாறு என்று சொல்லுமாறு ஓடுகின்ருள் என்கின்ருர். குவளையும் ஆம்பலும் காற்ருல் நடுங்கியது அவளது துயரங் கண்டு நடுங்குவது போனறிருநத தென்றும், கொடிகள் காற்ருல் அசைந்து கொண்டிருந்த தோற்றம் ஈண்டுவாரற்க, திரும்பிப் போ வெனக் கை காட்டுவது போல இருந்த தெனவுங் கூறியுள்ளார்.

ஊர்காண் காதை கோவலன் மதுரை நகரைக் கண்டதைக் கூறுவது. கோவலன் நகர் சென்று இடந்தேடி வருமளவும் இவளைப் பாதுகாக்க வேண்டுமென்று கவுந்தியடிகளை வேண்டினுன். அப்போது கௌந்தியடிகள் கோவலனுக்குச் சொல்லும் அறவுரைகள் யாவரும் என்ஞான்றும் மனத்திருத்தற் பாலன. பாவ வழியினின்றும் நீங்குங்கள். தீவினையானது தவருது பலனை நுகர்விக்கும் என்று பெரியோர்களெல்லாம் கூறவும் கீழ் மக்கள் அதனை மனத்துக்கொள்கின்ருரில்லை. தீவினையால் வரும் துன்பத்தை அனுபவிக்கும் போது தங்கள் பேதைமையான் பெரிதும் வருந்துவர். கற்றறிந்தோர் வினைப்பயன் நுகருங்காலைத் துன்புருர். பிரிதற் றுன்பமும், புணர்தற் றுன்பமும், மன்மதன் வருத்துந் துன்பமும் இல்லற வாழ்க்கையை மேற் கொண்டோருக்கல்லது துறவு நெறி பூண்டோருக்கில்லை என்பனவாம். ஊரின் அமைப்பும், வீதிகளின் சிறப்பும் கூறப்பட்டுள.

அடைக்கலக் காதை :— இது கோவலன் கண்ணகியை மாதரி என்பவளிடம் அடைக்கலமாக விடுத்த பகுதியைக் கூறுவது. மாடலன் என்னும் மறையவனுல் கோவலன், யானையைத் தடுத்து அந்தணனை விடுவித்தது முதலாக அவன் செய்த நற்செயல்கள் கூறப்படுகின்றன. "அவ்வியநெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்" என ஆசிரியர் திருவள்ளுவனுர் கூறியது போல, இம் மாடலனும் கோவல! இது காறும் நீ நல்வினை புரிந்தாயேயன்றி, தீவினை புரிந்தாயில்லை, முற்பிறப்பில் செய்த கொடுவினையாற் போலும் இவ்வாறு வருந்த நேரிட்டது என இரங்கிக் கூறினுன். மாதரியை நோக்கி, கவுந்தியடிகள் கூறும் வார்த்தைகளால் கண்ணகியிடத்துக் கவுந்தியடிகளுக்குள்ள அன்பை உணரலாம்.

(தொடரும்.)

# தமிழ்நெறி விளக்க வாராய்ச்சி.

E. R. நரசிம்ம ஐயங்கார் B.A., B.L., வழக்குரைஞர், சேலம்.

(முற்றொடர்ச்சி: துணர் உக, மலர் ய௧, பக்கம் 294)

இனித் தமிழ்நெறி விளக்கத்தின் ஆசிரியர் பெயரும் காலமும் அறிவதற்கோர் குறிப்பு யாப்பருங்கல விருத்தியிற்கண்ட செய்யுளாலும் அச்செய்யுளைப் பாடிய புலவர் பெயர் விளக்கத்தனார் என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பதாலும் அறியலாம் போலும். விளக்கத்தனார் என்பது ஒரு காரணப் பெயராம் என்பது தானே போதரும். தமிழ்நெறி விளக்கம் இயற்றிய காரணத்தான் சுருக்கமாக விளக்கத்தனார் என்னும் சிறப்பிடப்பட்டது போலும். நூல்கள் ஆசிரியர் பெயர் பெறுவது போல ஆசிரியர் நூற்பெயர் பெற்று விளங்குகின்றார் என்னலாம். இலக்கணம் இயற்றியவரும் "கெடலரு மாமுனிவர்" என்னும் செய்யுள் இயற்றியவரும் பாண்டிக் கோவைக்கு முற்பட்ட காலத்தவராயிருக்கும் ஒற்றுமையும் நாம் காட்டும் காரணத்திற்கு ஆதரவளிக்கிறது. தமிழ்நெறிவிளக்கம் ஒரு சிறந்த நூலாய்த் திகழ்ந்த தென்பதையும் அது ஆசிரியரின் காலத்திலேயோ அன்றி அவர் காலத்திற்கு அணித்தான காலத்திலேயோ உரை பெற்ற பெருமையையும் முன்னர்க் காட்டினும். நாம் கூறிய கருத்து பொருந்துமென்னின் விளக்கத்தனார் திகழ்ந்த காலமும் வரையறுக்கப்படும். இப்புலவர் பாட்டுண்டவன் அச்சுதன் என்பவன். இவ்வரசன் வெற்றிச் சிறப்பைப் புலவர் "கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்த" என்னும் ஒத்தாழிசைக் கலிப்பாவில் கூறுகின்றார். இவன் மதுரையில் வீற்றிருந்தானெனவும்

"கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்"

என்று மூவேந்தரை வென்றானெனவும் பாராட்டப் பெற்றுள்ளான். இவன் பாண்டிய நாட்டை வென்றவனாவன். பாண்டிய நாடு பிறராட்சிக்குட்பட்ட காலம் கி. பி. 6-ம் நூற்றாண்டென்பது வேள்விக்குடி சாசனத்தாலறியப்படுகின்றது. நாவலர் சரிதையில் அச்சுதன் மூவேந்தரைக் கீழ்ப்படுத்திய செய்தி கூறப்படுகின்றது. திருவிளையாடற் புராணத்திலும் இச்செய்தி கற்பனை வகையான் கூறப்படுகின்றது. இவ்வரசன் அவைப் புலவராக விளக்கத்தனார் திகழ்ந்தார் என்பது தெளிவாம். எனவே தமிழ்நெறி விளக்கமும் 6-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதென்பது பெறப்படும்.

தமிழ்நெறி விளக்கத்தின் உரையில் மதிதரன் என்னும் ஒரு வள்ளல் பாராட்டப்படுகின்றான். இவன் தமிழ்நெறி விளக்கத்தின் உரையாசிரியரைப் போற்றினவனாவன். அன்றெனின் உரையாசிரியர் அவன் காலத்திற்குப்பின் திகழ்ந்தவராவர். இவ்வள்ளல் காலம்

அறியவொண்ணுதாயினும் உரையாசிரியர் நூலாசிரியர் காலத்திற்கும் இறையனுருரைகாரர் காலத்திற்கும் இடைக்காலத்தவரென்பதுமேலே காட்டினுமாகலின் இவர் கி. பி. 7-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இருந்தவரென்னலாம். இவருரை பாராட்டப் பட்டதை நோக்கி இறையனுருரைகாரர் பொருமை கொண்டதை முன்னர்க் காட்டினும் ஆதலின் இவ்வுரையும் இறையனுருரைக்கு முன்னர்ப் பல்லாண்டுகள் பயிலப்பட்டதென்பது போதரும்.

இனி, இத்தமிழ்நெறி விளக்கம் உணர்த்தும் உண்மையை நோக்குவாம். களவு, கற்பு என்னும் இருகைகோள் பரிபாடலில் விளங்க வுரைக்கப்பட்டிருப்பது கண்டுகொள்க. தொல்காப்பியரும் இறையனுர் என்னும் ஆசிரியரும் அறத்தொடு நிலையினையும் உடன்போக்கையும் களவில் அடக்கியுள்ளார். இது களவு என்பதனேடு மாறுபடும். களவு வெளியாகும ஒழுக்கமே அறத்தொடு நிலையிலும் உடன் போக்கிலும் கூறப்படும். இதனை நோக்கியவாசிரியர் சிலர் இவ்விரு துறைகளைக் கற்பில் அடக்கினுர் போலும். திருக்குறளாசிரியரிடையும் இவ்வழக்கு காணலாம் போலும். தமிழ்நெறி விளக்கத்தனுர் கொண்ட பாகுபாடு தொல்காப்பியரொடும் இறையனுரொடும் மாறுபடும். இவ்வாறு மாறுபாடு கொண்டோர் பலர் முற்காலத்தில் உண்டென்பது புலப்படும். இறையனுருரையில் காணப்படும் பல மேற்கோள் விதிகள் இத்தகையனவாகும். இறையனுருரைகாரர் இத்தகையோர் கூறிய கருத்துக்குடம்பட்டவராவர். தமிழ்நெறி விளக்கத்தாரும் தொல்காப்பியரொடு மாறுபாடு கொண்ட கருத்தைத் தழுவிச் சென்றிருப்பது விளங்கும்.

இத்தகைய கருத்து வேறுபாடு இருப்பதை அறிந்த நாற்கவிராச நம்பிகள் தாம் இயற்றியுள்ள அகப்பொருள் விளக்கத்தில் இருவகையோர் கருத்துக் கிணங்க வரைவியல் என்ருெரு புதிய பாகுபாடு கொண்டு அதனைக் களவிற்கும் கற்பிக்கும் இடையில் வைத்திருப்ப தறிக. தமிழ்நெறி விளக்கம் நமக்குக் கிடைக்காதிருப்பின் நம்பிகள் தொல்காப்பியத்தொடு மதவேற்றுமையுடையராகி வரைவியலை வகுத்தாரென்ன வேண்டியிருக்கும்.

தமிழ் நெறி விளக்க வாசிரியர் களவுக்கு முன்னர்க் கைக்கிளை நிகழ்ச்சிகளைக் கூறுதிருப்பது சில தமிழறிஞருக்கு வியப்பைத் தருகின்றது. வியப்பிற்குச் சங்ககால நூல்களை ஊன்றியுணராமையும் சங்ககாலத்தில் தொல்காப்பியரால் மொழியப்பட்ட வழக்குகளே வழுவாமல் நடைபெற்று வந்தன வென்பதுமே காரணமாகும். கைக்கிளை அகப்புறமெனக் கருதப்பட்டதைப் பன்னிரு படலத்திற் காணலாம்.

> "கைக்கிளை பெருந்திணை யென்றுங்
> கத்திணை யிரண்டு மகத்திணைப் புறனே"

யென்னும் விதியினை யறிக. இக்கருத்து களவியற் காரிகை உரையில் வற்புறுத்தப்படுகின்ற தறிக, இதனுன் அந்நூலினும் கைக்கிளையைக்

கொள்ளாதிருப்பதும் அறிக. பன்னிரு படலம் இறையனுருரைப் பாயிரத்திலும் வருகின்றமையின் இக்கருத்து மிகத் தொன்மையதென் பது போதரும். கைக்கிளைச் செய்யுள் கலித்தொகையில் இறுதியில் கோக்கப் பட்டதும் இக்காரணத்தானே என்க. இவ்வாறே கலித் தொகையில் பெருந்திணைச் செய்யுளும் இறுதியில் கோக்கப்பட்டிருப் பது காண்க. கைக்கிளை புறத்திணையில் கூறப்படுவது காண்க.

அகத்திணையில் கைக்கிளை சேர்த்துக் கூறப்பட்ட காலம் சங்க காலத்திற்குப் பின்னரென்க. (இங்குச் சங்க காலம் என்றது கடைச் சங்ககாலம் எனப்படுவது. எமக்கு முச்சங்க வரலாறு உடம்பா டன்று.) சங்ககாலம் என்பது கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட நான்கு நூற்றுண்டுகளாகும்.

களவியற் காரிகை உரையாசிரியர் பாண்டிக்கோவை திருக் கோவை,பொருளியல் என்னும் இலக்கியங்களை ஒவ்வொரு கிளவிக்கும் விடாதுகூறுங்கடப்பாட்டை உடையவர் என்பது அந்நூலைநோக்குவா ருக்குப்புலப்படும். கைக்கிளையைவிளக்குமிடத்துப்பாண்டிக்கோவைச் செய்யுளுந் திருக்கோவைச் செய்யுளும் காட்டாக வந்துள. பொரு ளியல் செய்யுள் கண்டிலம். இதனுன் பொருளியல் நூலின் ஆசிரி யரும் கைக்கிளையைப் புறத்தின தெனவோ அகப்புறமெனவோ விலக் கினுர் போலும். இப்பொருளியல் நூலைத்தழுவியும் சங்ககால வழக் கையாய்ந்தும் தமிழ்நெறி விளக்கத்தாரும் கைக்கிளையைக் கொள்ளா ராயினுர் போலும்.

இனிப்பொருளியல் நூலுணர்த்து முண்மையினை நோக்குவாம். கிளவிகளைத் தொடர்புபடக் கூறுவது நாடகத்தினை ஒருவாறு ஒக்கு மென்னலாம். இவ்வாறு கிளவிகளைத் தொடர்புபடக் கூறவெழுந்த நூல்களுள் இதுவே மிகத்தொன்மையதாகும், இது சங்க காலத்தின் பின்னர் இயற்றப்பெற்றதாகும். சங்ககாலத்திலும் அதன் பின்னரும் பல் நூற்றுண்டு வரையில் தொடர்புபடக்கூறும் வழக்கு நிலை பெற வில்லை என்னலாம்.

சங்காலப் புலவர்கள் தனித்தனி கிளவிகளுக்குரிய செய்யுள் யாத்தனர். தொடர்புபடக் கூறுவதில் அன்னோர் தங்கருத்தைச் செலுத்தவில்லை. தொல்காப்பியரும் செய்யுளியலில் தனிச்செய்யு ளின் இலக்கணமே கூறியுள்ளார் என்னல்வேண்டும். தொடர்நிலைச் செய்யுளுக்கு இலங்கணங் கூறினுரென்று அடியார்க்கு நல்லாரும் அவரை யொட்டிச் சென்ற பேராசிரியர் முதலியோரும் பகர்ந்தவுரை நிலைபெறுதென்க. தொடர் நிலைச் செய்யுள் என்னுங் குறியீடும் அத னைக் குறிக்கும் வனப்பு என்பதும் இளம்பூரணருரையிற் காண வொண்ணுது. இளம்பூரணர் கூறி இருக்கும் கருத்து யாப்பருங்கல விருத்திக்கும் ஒக்கும். இப்புதிய கருத்திற்குச் சங்ககாலச் செய்யுள் இடந்தருகின்றதில்லை. இதுபுறத்திணைக்கும் ஒக்கும். பதிற்றுப் பத்தைத் தொடர் நிலைச் செய்யுட்குக் காட்டலாமாயினும் அவையும் தனிக் கிளவிச் செய்யுள் தொடர்பின்றிக் கூறப்பட்டவை என்க. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாடிய செய்யுட்கள் அந்தா

தித் தொடைபட வருமாயினும் அவையும் தொடர் பின்றி வரும்தனிச் செய்யுளே யாமென்க.

கலித்தொகையில் உரிப்பொருள் ஒற்றுமைப்படும் பல கிளவி களைக் கோப்பதோர் வழக்கைக் காண்டும். இதுவும் அருகிய வழக் காய்ச் சில புலவரால் கையாளப் பட்டதென்க. திருக்குறள் ஆசிரி யரும் இத்தகைய வழக்கைப்பற்றிப் பொருளியலாகிய இன்பப் பகுதியைப் பாடியுள்ளார் என்க. இதனன் திருக்குறள் ஆசிரியர் காலம் வரையிலும் செய்யுள் தொடர்புபடக் கூறும் வழக்கு நடை பெறவில்லை என்னத் துணிந்துரைக்கலாம்.

எனவே கிளவித் தொடர்புபடக் கூறுவதற்குரிய தொன்மைத் தான சான்று பொருளியல் ஒன்றேயாகும். இதன் காலம் தமிழ் நெறி விளக்கம் தோன்றிய 6-ம் நூற்றுண்டிற்குச் சில நூற்றுண்டு முந்தி வைத்துக் கூற வியலும் என்க. இத்தகைய வழக்கை யொட்டியே தமிழ் நெறி விளக்கம் செல்லுகின்றது. இது வொரு கோவை நூல் இலக்கணமாய் அமைவது காண்க. கோவை நூல்கள் தோன்றலுற்ற காலமும் கி. பி. 6-ம் நூற்றுண்டிற்கும் முற்பட வைத்துக் கூற வமையாது.

தொல்காப்பியர் கூற்று வகையைத் தொகுத்து அகப்பொருள் இலக்கணம் ஓதியிருப்பது சங்க காலச் செய்யுள் வழக்கிற் கொத் திருப்பது காண்க. தமிழ் நெறி விளக்கத்தார் முற்கால வழக்கையும் அதற்கொத்த பிற்கால வழக்கையும் தழுவி நூல் இயற்றினர் என்க.

கிளவிகள் தொடர்புபடக் கூறும் வழக்கு தொடங்குங் காலை அகத்திணை புதிய நிலையொன்று எய்துவதாயிற்று. சங்க காலத்தில் பாடப்பட்ட செய்யுள் ஒவ்வொன்றையும் திணைப் பாகுபாடு படுத்திக் கூறும் நியமம் நடைபெற்று வந்தது. அக்காலப் புலவர்கள் தாம் தாம் இயற்றிய செய்யுளுக்குத் தாம் தாமே திணைப் பெயரும் இட்டு வந்தனர். இது நெய்தல்பாடிய தத்தனர் பாலை பாடிய பெருங்கடுங்கோ முதலிய பெயர்களால் அறியப்படும். இவ்வழக்கு ஒழிந்தது. செய்யு ளில் கூறப்படும் பொருளை ஊகித்துத் திணை அறிய வேண்டிய நிலை எய்தலாயிற்று. இதுவும் பின்னர் அறிவதற்கியலாத நிலையும் எய் தியது. திணை அறிவதற்கு முதற்பொருளும் கருப்பொருளும் வெளிப் படையான கருவிகளாம். முதற்பொருளும் கருப்பொருளும் கூருது உரிப்பொருள் மட்டும் கூறப்படும் செய்யுள்கள் தோன்றின. உதா ரணமாகத் திருக்குறள் பொருளியல் முதலியவற்றைக்காட்டலாம். இதனன் அகத்திணை ஒரு தாழ்ந்த நிலை அடையலுற்றது என்பது தெளிவாம். முதற் பொருளும் கருப்பொருளும் உவமை வகையான் சிறப்பெய்தி விளங்கும் பழைய வழக்கு ஒழியவே இப்பொருளுக்கு ஒவ்வாத உவமைகள் புகுவனவாயின. உதாரணமாகக் குலோத்துங்க சோழன் கோவை நூலைக் காட்டலாம். பொருளியல் போன்றஇலக் கியங்களையும் தமிழ்நெறி விளக்கம் போன்ற இலங்கணங்களையும் தொல்காப்பியம இறையனர் களவியல் முதலியவற்றிற்குத் துணைக் கருவிகளாகக் கொண்டு ஆய்வது பயன் தரும் என்பது திண்ணம்.

# தமிழும் கலேயும்.

திரு. வித்துவான். மு. அரசங்கண்ணனுர் அவர்கள் M. O. L.

(முற்றெடர்ச்சி: துணர் உக, மலர் ௰௨, பக்கம் 320)

அவ்வாறு செயலாற்ருதிருப்பது மனிதத்தன்மையோ? நம் மக்கள் எவ்வண்ணம் இருக்கின்றனர் ? நம் மொழி எவ்விதம் இருக்கிறது ? நம் முன்னோர் எவ்வண்ணம் வாழ்ந்தனர் ? இன்றைய தமிழரின் வாழ்வு............நின்று தேய்ந்த குமரி போன்ற கதையாக அல்லவா இருக்கின்றது ? இத்துணைக் காலமும் பொறுத்தோம். இனி ஒருகாலும் சும்மா இரோம். எதற்கும் சமைவாகி ஒன்று போர் செய்தல் அன்றி வாதாடுதல் எதையேனும் மேற்கொள்ளல் வேண்டும் ! முன்னைய தமிழரின் உயர்ந்த எண்ணத்தை எண்ணுதல் வேண்டும் ! நாடு செழிக்க வேண்டும். மொழி வளர்ச்சியுற வேண்டும் ! தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்தல் வேண்டும் ! தமிழ் ஒரு மொழியாய் நின்று உலகாண்ட மொழி என்று இளங்கோவடிகள் கூறுகின்ருர். பிறகு வடவேங்கடம் தென்குமரி வரை என்று தமிழ் நாட்டிற்கு எல்லே கூறி வரையறுத்திருக்கின்றனர். அந்த இடமும் இன்று வருமோ ? என்ற ஐயம் இருந்துகொண்டேதான் இருக்கிறது. அவ்வண்ணம் அதற்குப் பாடுபடுங்கால் எவ்வித இடர்கள் வந்துற்ருலும் துன்பங்கள் எண்ணில போந்தாலும் எதற்கும் சமைவாய் இருத்தல் வேண்டும். அதுவே திண்மையும் உறுதிப்பாடும் ஆகும். இதற்கும் துணிந்து முன் வருபவர்கள் தமிழ் மாணவர்களாகவே யிருப்பர். ஆனல் இதுபோது தமிழ்ப் பண்டிதர்கள் என்று ஒதுக்கியே வைத்திருக்கின்றனர். ஆண்டுக் கணக்கில் எண்ணற்ற நூல்களைக் கற்கின்றனர். ஆங்கிலம் கற்பவர்களைவிட அரும்பாடு பட்டுப் பயில்கின்றனர். அதனை நினைந்து பார்த்தால் உளங் கலங்கித் தடுமாறும். தொல்காப்பியச் சேனவரையம் நச்சினர்க்கினியம் போன்ற நூற்களை யெல்லாம் நுணுகி யாய்ந்து அழுந்திப் பயின்று அல்லும் பகலும் அயர்விலா துழைத்து வெளிப்போதரும் அறிஞர்கட்கு இத்தகைய இழிவு வரலாமா ? வித்துவான் தானே என்று எள்ளி இகழ்வதா ?

இங்கிலேகளை யெல்லாம் நன்கு விளக்கிச் சென்னைப் பல்கலேக் கழக ஆட்சியாளருள் ஒருவராகிய சாலன் மகமடன் அவர்கட்கு அறிவித்தேன். தமிழுக்குப் பல்கலேக் கழகத்தில் தக்க நன் மதிப்புத் தரப் பெறுதல் வேண்டும் என்று மன்ருடினேன். அதனல் அவரும் ஒப்பிச் சிபாரிசு செய்தார். மேலே இருக்கும் ஒருவர்; தமிழ் உயர் தனிச் செம்மொழி (Classical Language) அன்று; புத்தியல்மொழியே (Modern Language) என்று கூறி எமது வேண்டுகோளை ஒதுக்கித் தள்ளினர். இத்தகு செயலே வேறு எந்நாட்டிலேனுங் காண்டல்

இயலுமா? எங்கள் கல்லூரியில் 700 மாணவர்கள் பயில்கின்றனர். 300 மாணவர்கள் தாம் அவருள் தமிழ் கற்கின்றனர். ஏனை எஞ்சிய மாணவர்கள் எல்லாம் தம் தாய் மொழி பயிலாது வைத்தே ஏனைப் பிறவற்றை யெல்லாம் கற்கவும், அவையிற்றான் பல பட்டங்கள் பெறவும், உயர்நிலைகள் எய்தவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. என்னே கொடுமை! தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ் நாட்டிலே வளர்ந்து தாய் மொழியாகிய தமிழ் மொழியைப் பயிலும் பேறு பெறாது செத்து மடிவது எத்துணை இரங்கற்பாலது? பிறநாடுகளி லெல்லாம் தாய்மொழி பயின்று தேர்ந்த பின்னரே வேறு மொழிகளைக் கற்பது இயல்பாக இருந்து வருகிறது. அதற்கு முற்றிலும் மாறு பாடாக நம் நாட்டு நிலைமை உள்ளது!

அண்மையில் ஒரு பெரியவர் நம் தமிழ் நாட்டுக்கு வந்தார். ஏன் இங்கு இன்னும் இந்தி மொழி பரவவில்லை என்றார். அதற்குப் பம்பாயிலிருந்து வெளிவரும் இதழ் ஒன்று 'தமிழ் மக்கள் இது போது உணர்ச்சி பெற்று விழிப்படைந்து விட்டார்கள். அதனால் இந்தி மொழி பரவுதல் என்பது அத்துணை எளிதன்று' என்று எழுதி யுளது. எனவே, நாம் உணர்ச்சி பெற்று விழிப்புற்று விட்டால் எத்துணை மொழிகள் இங்குப் போந்தாலும் அவை ஒரு சிறிதும் இங்கு நிலைபெற முடியா. கடவுண் மொழி எனப்படும் வடமொழியும் வடநாடு, மலையாளம், கிரீக் முதலான நாடுகளில் எல்லாம் வெற்றி பெற்றது. ஆயினும் நம் தமிழ் நாட்டிலே அம்மொழி தோல்வி யடைந்தது. இதனைக் கால்டுவெல் அறிஞரும் "தமிழ் நாடே வட மொழியின் தோல்விக்களம்." என்று 1864-இல் எழுதிச் சென்றார்.

எனவே, இனியாதல் தமிழ் மக்கள் எல்லோரும் தமிழினைக் கட்டாயம் முதன் முதலிற் பயின்று கற்றுத் தெரிந்து தேர்ந்து கொள்ளல் வேண்டும். தமிழ்க் கல்வி முடிந்ததும் முதற் பகுதி இரண்டாம் பகுதி என்று வரையறுத்து, மற்றைய மொழிகளைப் படிப்பதற்குரிய ஆக்க வேலைகள் பல செய்தல் வேண்டும். எத்தனை மொழி வேண்டுமானாலும் கற்கலாம்.

1937-ல் ஒரு பெரியாரைப் பார்க்கச் சென்றிருந்தேன். வித்வானா என்று வினவிய பின் என்னை நிற்க வைத்துவிட்டு அவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். உண்மையாகத் தமிழ் படித்தவன் நிற்க வேண்டுமா? வேற்று மொழி படித்தவன் இருக்க வேண்டுமா? என்பதனை நீங்களே சிந்தியுங்கள்! ஆனால் நான் என்ன செய்தேன் தெரியுமா? கடைசியில் அவர் பக்கத்திருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து விட்டேன். என்னைப் பார்த்த அவர் கள்வனின் காதலி படித்து விட்டீரோ என்று கேட்டனர். இப்படிப் பட்டவர்கள் எல்லாம் செத்தால் கூட யாம் சிறிதும் கண்ணீர் விடக் கூடாது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு புலவனையும் மறத்தலாகாது. ஒழுக்க முறையோடும், அறிவு முறையோடும், ஆராய்ச்சி முறையோடும் பண்பு நெறியில் சிறிதும் தவறாது தமிழன்னையின் காலையே தம் தலையில் வைத்து நல் நெறியில் நின்று வாழ்ந்தனர் சங்க காலத்தவர்; அதனால் தான் நாம் இன்னும் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

தமிழ் நாட்டிற்கு, தமிழ் மக்களுக்குத் தீந்தமிழை நன்கு கற்று அமுதவாரியாக வாரி வாரி இறைத்த ஞானியாரடிகளின் பெருமை சிறிதேனும் குறையுமோ? இக் காலத்தில் தமிழ் சீர்பெற்றுப் பெருமையுற்று விளங்குவதற்கு வருங்கால வீர இளைஞர்களைக் கரந்தையம் பதியிலுள்ள தமிழ்ச் சங்கம் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது, என்று எண்ணும்போது தமிழவேள் த. வே. உமாமகேசுவரரின் புகழ் ஓங்கு மன்றோ ?

ஆகவே இனி நாம் என்ன செய்யவேண்டும். நமக்கு என்ன வேண்டும்? நமது நலிவு நீங்க மழை வேண்டும்! என்ன மழை வேண்டும்? தமிழ் மழை வேண்டும்! தமிழ் மழை வேண்டும்!! எல்லோரும் தமிழைக் கற்க வேண்டும். அதுபோது யாவரும் அறிவுடையவர்களாக விளங்குவார்கள். அப்பொழுதே நாடும் நன்னிலை யடையும்! மக்களின் வாழ்க்கையும், செம்மையுறும் என்று கூறிவிட்டு எனது வணக்கத்தையும தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

---

## பாரி மகளிர்.

திருவாட்டி. மே. மாசில்லாமணி அம்மையார் M.A., L.T., அவர்கள்
பெண்கள் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

(ஒரு சிறு நாடகம்.)

I

Act I Se I

இடம்:— பாரி அரண்மனை

பாத்திரங்கள்:— வீரன், முருகன், அமைச்சர், பாரி.

**வீரன்:-** கொடைப் பெருந் தலைவன் கோமகன் வருகை
தடைப்படக் காரணம் தருவாய் முருகா,

**முருகன்:-** அறியாய் நீயெனில் அறியேன் நானும்
வறிஞர்க் கன்பன் வள்ளல் பாரி
எங்கோ சென்றனன் கங்குலு மாகுதே

**வீரன்:** அந்தோ பாராய்! அவலக் காட்சியை
தந்தையாம் மன்னர் தகுதே ரற்றுப்
பருமணல் தரையில் பதமிக நோவ
வருமிக் காட்சியை வந்துநீ பாராய்!

**முருகன்:-** தெவ்வர் மருளும் தேருடன் சென்றுன்
எவ்வா றிங்ஙனம் எழுந்தனன் இறைவன்
தாமரை அடிகள் தரையுற் றழுங்கக்
காமர் வதனம் கலக்க மிலாது!

**வீரன்:-** தலைவன் அணிதேர் தங்கிய தெங்கே?

**முருகன்:-** மதிகொள் அமைச்சர் மன்னனை வினவுவர்,
ஒதுங்கி நிற்பாய் உற்றுக் கேட்போம்.

(ஒருபுறம் இருவரும் ஒதுங்க)

**முதல்அமைச்சன்:-** எம்அருங் காவல! எம்அரும் இறைவ!
பன்னரும் வெம்பரற் பாரினில் நடந்து
தாமரை அடிகள் தரையினில் அழுந்த
சாமரைக் குரியாய்! தனியே வந்தாய்!

**இரண்டாம்-அமைச்சன்:-** மன்பதை காக்கும் மாசறு மன்னு!
பன்னரும் புகழைப் பாரினில் கொண்டாய்!
இச்செயல் உனக்கும் ஏற்குமோ ஏற்குமோ?
நச்சினேம் காரணம் நவிலுவாய் எமக்கே.

**பாரி:-** என்அகம் கொண்ட எழில்வினை அமைச்சே
உன்மொழி கேட்டே உவந்தனன் நானும்.

**இரண்டாம்-அமைச்சன்:-** மக்கள் தலைவ! மாண்புறு வள்ளல்!
மனமலர் மலர பதமலர் சிவப்பதேன்?

**பாரி:-** வேனிலான் ஆட்சிகொள் கானகத் திடையே
பானில வென்னப் பன்மலர் செறிந்த
முல்லையங் கொடியோர் நல்லிடம் அற்று
முழுவதும் படரக் கொழுகொம் பற்றே
ஏங்கிடக் கண்டேன்; என்தேர் நிறுத்திப்
பாங்குடன் அதனைப் படரச் செய்தேன்;
முற்றுமே களித்து முறுவலும் பூத்தது.

**முதல்-அமைச்சன்:-** இறைவ வாழி எவ்விதம் புகழ்வோம்?
குறையறு கருணை கொண்டாய் மனத்தில்
ஓரறி வுயிர்க்கும் உவந்தளி செய்தாய்;
பார்மகள் இன்னோர் படைத்ததா லன்றோ
ஊழி ஊழியாய் உண்டிவ் வுலகம்.
வாழி உன்அருள்; வாழி உன்கொடை;
ஆழிக் கரையின் அளவிலா மணலினும்
வானின் மீனினும் வாழிபல் ஆண்டே.

## Act I. Se. II.

இடம்:— பாரி அரண்மனை. பாத்திரங்கள்:— பாரி, கபிலர்.

**பாரி;-**

பாவலர் ஏறே! பண்புறு புலவ!
காவலன் எனது கடிநகர் துரந்து,
பறம்பு மக்கள் பல்வகை இடர்ப்பட,
மறந்து சென்றீர், மங்கையர் மறப்பரோ?
அங்கவை உந்தம் அருள்முகங் காணுள்
எங்குமே தேடி ஏக்கமுற் றிருந்தாள்;
சங்கவை தானும் சாலவும் நொந்து
திங்கள் இரண்டைத் திருவறக் கழித்தாள்;
அந்தணப் பெரியாய்! ஆருயிர் நண்ப!
எந்தாய்! இருப்பாய் என்றும் எம்முடன்;
உந்தம் நட்பே சிந்தா ஆக்கம்;
உந்தம் வாழ்வுகண் டுவந்தேன் என்றும்.

**கபிலர்:-**

மன்பதை காக்கும் மாபெருந் தகையாய்!
என் மனங் கவர்ந்த இன்முகங் கொண்டாய்
பரிசிலர் தமக்குப் பல்வகை நிதிகள்
பரிந்துவந் தளிக்கும் பாரிதான் நீயே;
ஊர்முந் நூறுக் குரியவன் ஆனுய்
பாரில் நின்புகழ் பரந்ததே எங்கும்
சேரமான் தானும் நீதரும் கொடையை,
ஊரெலாம் சாற்றினன் உள்ள நிறைவால்;
பாண்டியன் உனது பண்புறு கொடையை
ஈண்டிய மக்கட் கெடுத்துரைத் தனனே;
ஆத்தி மலரோன் ஆண்தகை உனது
ஏத்தருங் கொடையை ஏத்தினின் றனனே;
இத்தகு சிறப்பின் உத்தமன் நீயெனில்,
இத்தரைப் பாவலர் இசைவளர் செல்வர்
உன்பெரும் அளியும் அன்பும் கொடையும்
தம்பெரும் பாவினுல் தரையோர்க் களிப்பர்.

**பாரி:-**

குறிஞ்சித் திணையின் கூறுகள் பலவும்
அறிந்து பாவால் அருளிய ஏறே!
பாண்டியர், சேரர், பல்புகழ்ச் சோழர்
வேண்டிய வகையே விதம்விதம் பரிசில்
நித்தமும் தத்தம் மெத்தநற் கொடையால்
இத்தரை எனைவிட ஈந்தனர் அறிவேன்.

**கபிலர்:-**

பரிசிலர்க் களித்தும் பார்தனைக் காத்தும்
நெறிமுறை தவருு நீதியோ டாண்டாய்!
பாண்டியர் சேரர் பல்புகழ்ச் சோழரும்
மாண்புறு நின்கொடை மறுப்பரோ மறந்தும்?

பாரி:- முத்தமிழ் முறைதனை முழுவதும் உணர்ந்தீர்!
எத்துணை ஏதுவால் என்கொடை இன்று
சிறப்பென் றறைந்தீர்? சிறியேன் அறியேன்.

கபிலர்:- அறிவேன் உன்அருள்; அறிவேன் உன்கொடை;
அறிவேன் உனது அருளுடை மனமே.
வானம் பொய்த்த கானகத் திடையே
வேனிலான் வெம்மையால் வெய்துற் றொடுங்கிக்
கொழுகொம் பற்றுக் கூம்பியே கிடந்த
பழுதறு முல்லையின் பழுதுறு நிலையை
கண்ணுற் கண்டு காணவும் பொறுது
மண்ணிடைக் கடாவுந் திண்பெருந் தேரை
அன்றே கொடிக்கு அன்புடன் ஈந்து
ஈரடி வருந்தப் பாரகம் நடந்தாய்
பேரும் சீரும் பெருமையும் பெற்றாய்.

பாரி:- மன்னவர்க் குரியவாம் மல்கிய கடனில்
இன்னதும் ஒன்றென ஏற்றனன்; வேறென்
சிறப்புறு செயலெதும் செய்தே னிலேயே!

கபிலர்:- தான்தற் புகழ்தல் தகுதி யன்றே
கோன்நீர் இம்முறை கொண்டுரை செய்தீர்.

பாரி:- எந்தையே உமக்கு என்மனஞ் சொல்வேன்
சிந்தையில் கொள்வாய் சிற்றுரை கேளாய்;
உந்தம் நட்பில் உவந்தவ ரெவர்க்கும்
நைந்திடற் குரிய நலிவு முண்டோ?
அறிவில் திளைத்த அந்தண! உனது
செறிவுற் றிருந்த சிந்தையின் நலனை
சிறிது சிறிதாய் யானுங் கற்றுச்
சிறப்புடன் வாழுஞ் செல்வம் பெற்றேன்;
அறிவுடைப் புலவரை அறிவதும் நன்றே;
பரிவுடை நண்பரைப் பார்ப்பதும் நன்றே;
இயற்கை எழிலை எடுத்து ஓதி
செயற்கை அறிவைச் செழிக்க வைக்கும்
செல்வராம் புலவரைச் சேர்வதும் நன்றே
நன்றே நட்பு; நன்றே அறிவு
நன்றே அறிவுடை நாவலர் நட்பே.

## Act. I. Se. III.

இடம் :— பாண்டியன் அவை.

பாத்திரங்கள் :— பாண்டியன், சோழன், சேரன்.

பாண்டியன்:- உறந்தையம் பதியில் உறைந்திடும் கோவே!
அறம்வளர் அரச வருக! வருக!

வஞ்சியின் வளத்தை வழிவழி வளர்த்த
அஞ்சாச் சேர வருக! வருக!!
கடிநகர் மதுரை களிக்கக் கூடினீர்
படிமிசைப் பாவலர் பாடிய நீவிர்.

**சோழன்:-** சந்திர குலத்தின் சுந்தரத் தோன்றல்!
உம்தம் ஓலையை உவகையிற் பெற்று,
வந்தோம் யாமும் வளநகர் மதுரை.

**பாண்டியன்:-** ஒன்றே நினைந்தேன், ஒன்றே பலகால்
இன்றே எனது எண்ணமும் கேளீர்!
பாவலன் கபிலன் பாக்கட் குரியான்,
நாவலர், பரிசிலர், நாடிடும் நண்பன்,
பூவலம் மீதில் புனிதன் பாரி
என்னே அவன்தன் எழில்பெருந் தகைமை!
கொன்னே தன்னூர் முந்நூ றனைத்தும்
ஈந்தனன் பரிசிலர் இன்னல் தீர்க்க,
கூர்ந்தனன் கருணை கொடியின் மீதும்,
அந்தணக் குரிசில் அறிவுடைக் கபிலர்
மந்தணத் திருந்து மதிகூ றிடவும்
சிந்தை உகக்கும் செந்தமிழ்ப் பாத்தொடை
அந்த மிலாது அன்புடன் சூட்டவும்
அந்தோ எல்லாம் அவனே பெற்றான்?

**சேரன்:-** இன்னமும் கேளீர் யானும் அறிவேன்
பரிசிலர் யாவரும் பரிவுடன் எங்கும்
குரிசிலாம் பாரியை, 'கொடைநிறை வள்ளல்!
பாவலர் பலர்க்கும் பண்புறு தகையாய்!
காவலன் எனும்பெயர் தாவறப் பெற்றாய்!'
எனப்பல முகமன் எங்கணுங் கூற
மனந்தனில் அவனும் மாறாச் செருக்கைத்
தினந்தினங் கொண்டான் திமிர்ந்தே நின்றான்.

**சோழன்:-** பறம்பின் புரவலன் திறம்பெறும் புகழை
அறம்படும் முறையில் அடைந்தான் எனினும்,
முடியுடை வேந்தர் மூவர் நமக்குப்
படிமிசை நிரம்பப் பழிச்சொல் படுமே.

**சேரன்:-** அந்தோ கெட்டது ஆத்தியின் பொலிவு;
நைந்தே போயது நறுமலர் வேம்பு;
பகைவர் கொண்டனர் பனையின் சிறப்பை;
நகைதரும் வண்ணம் நடந்ததே யென்கொல்?

**சோழன்:-** முடியுடை மன்னர் முன்னவர் பழங்குடி
படிமிசை யின்றுடன் பாழடைந் தழியும்,
'வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணு' மென்றும்
'பழங்குடி பண்பிற் றிரிதலில்' என்றும்

வையம் புகழும் வள்ளுவன் முன்னுள்
மெய்யாம் வாசகம் ஈந்தனன் அன்றோ?
வள்ளுவன் இயம்பிய வாசகம் இன்றே
எள்ளும் வகையாய் இருந்தது கண்டீர்!

**சேரன்:-**
பாண்டிய வீர! பல்புகழ்ச் சோழ!
ஆண்டநம் மரபே அழிந்திடா வண்ணம்
ஊன்றிய கருத்துடன், ஒல்லும் வகையைச்
சான்றோர் நுமக்குச் சாற்றுவன் கேளீர்!
பாரியின் பயன்நிறைப் பறம்பைச் சூழ்ந்து,
உழிஞை சூடி ஒன்றி எதிர்த்துப்
பழியே வரினும் பாரியை ஒழிப்போம்.

**சோழன்:-**
சேரமான் கூறிய சிறப்புறு சூழ்ச்சியே
கூறயான் துணிவன் கொற்றவ பாண்டிய!
முடியுடை வேந்தர் மூவர் நாமே
படியிடைப் பாரியின் குடியை அழிப்போம்;
கூடியே சென்றக் குறுநிலப் பாரியை,
தேடியே அழித்துத் திரும்போ மெனிலோ
முடியுடை வேந்தர் மூவர்யா மில'ரெனக்
கடிநகர் துறந்து, கான்சென் றுறைவோம்.

**சேரன்:-**
வஞ்சியின் வேந்தன் வஞ்சினங் கூறுவன்;
நெஞ்சங் கலங்கா நியமம் பூண்டு
வஞ்சனை வழியாய் வள்ளலைக் கொல்வேன்;
கொல்லா திவ்விடம் செல்லுவன் எனிலோ,
ஒல்லும் வகையில் உயிரை மாய்த்து
மானமே பெரிதெனும் மாண்பு பூண்டு,
ஈனமாம் உடலை இகழ்ந்திடத் துணிவேன்.

**பாண்டியன்:-**
இன்றே எழுக! என்னுடன் வருக!!
இன்று தாழ்த்திடின், நன்றும் கருமம்
நலம்கெடும்; நம்மனம் நலிவுறும் அன்றோ?
சேரமான்! நீவிர் சிறப்புறு வஞ்சியின்
வீரரைக் கூட்டுவீர் விரைவுடன் இன்றே
புலிக்கொடி ஏறே! புகலவும் வேண்டுமோ?
புரவி வீரரும் களிற்றின் தலைவரும்
திறம்பெறு தேரும் தேர்ந்த பதாதியும்
விரைவுடன் செல்ல வினைசெய் வீரே.

Act. II. Sc. I.

இடம் :— பாரி அரண்மனை முற்றம்.

பாத்திரங்கள் :— அங்கவை, சங்கவை, பாரி.

சங்கவை:- பான்மதி தண்ணொளி பரப்பிய கதிர்கள்,
வானகம், மண்ணகம், தேனகக் கொன்றை,
பல்லிதழ்ப் பூக்கள், கல்லதர் அருவி,
எங்கணும் சென்று இன்பமே பயக்கும்.
கங்குலின் மாட்சி எங்குள பகற்கு?
பச்சிலைத் தருக்களில் பாலொளி தவழ்ந்து
அச்சனின் அருள்தனை நிச்சயம் விளக்கும்;
கல்லென் பேரொலி ஒல்லும் மாநகர்
எல்லாம் அடங்கி அல்லல் ஒழிந்தது;
வேனிலான் ஒடுங்கி, மானிடர் ஒடுங்கி,
தாயொடு மக்கள் பார்ப்பொடு பறவை,
யாவருந் துயின்றனர் மேவருங் களைப்பால்.

அங்கவை:- இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
எழில்கெழு பறம்பின் ஒளிநிறை காட்சி
எத்தனை பொலிவு! நித்தமுங் கனிவு;
சுந்தர மதியம் நந்தா வனப்புடன்
கவின்பெற ஊர்ந்தும், புவிக்கணி தந்தும்,
கருநெடு முகிலில் கொடுமென மறைந்தும்,
ஒருமுறை மறைந்தும், மறுமுறை மலர்ந்தும்,
தருக்களுக் கூடே தண்முகங் காட்டியும்,
மறுவும், திருவும், மயங்கித் திகழ்ந்திடும்;
வானை அளாவிய வான்பெரும் மரங்களில்
தேனுறும் இறால்கள் ஏமுற விளங்கும்;
சில்லென வீசும் மெல்லிய காற்றுடன்
பச்சையாம் இலைகள் பண்ணுடன் நாட்டியம்
நச்சியே செய்வதை நங்காய் காணாய்!

சங்கவை:- நந்தா விளக்காம், நாள்மீன் கூட்டம்
சுந்தர மதிசூழ் விந்தையைப் பாராய்!
நீலக் கடலாம் கோல வானம்
பன்னா ருயிரம் பாவை விளக்காம்
விண்மீன் விளக்குடன் விளங்கும் பொலிவை,
இத்தரை மீதில் வித்தகப் புலவர்
நித்தமும் வியப்பர், நிதம்நிதம் பாடுவர்;
குறிஞ்சியின் வளனைக் குறையறக் கூறும்,
பெருங்கவிப் புலவர் அருஞ்சொற் புலவர்
இருந்திடில் இவ்வெழில் இயல்பினைத் தீட்டுவர்.

**சங்கவை:-**

நம்பெரும் புலவர் நம்பெரும் ஆசான்
இயற்கை எழிலை இயம்பும் திறத்தால்
என்றும் அழியா இன்ப நிலையை
துன்றச் செய்வர் துயரைத் தீர்ப்பர்.

(பாரி வருகிறான்.)

**பாரி:-**

என் அரும் மக்காள்! எதற்கோ இங்கு
பன்மலர்க் கோதையீர்! பாவையீர்! இருந்தீர்?
பானில வொளியைப் பருகுவீர் போல,
தாவில் முற்றத் தமர்ந்தீர் நீவிர்;
என்னே இவ்விடம் இன்னும் அமர்ந்தீர்?
கொன்னே இங்ஙனம் குன்னும் குளிரில்;
அரிதுயில் கொள்ளும் அமயமே ஆயினும்
சிறிதும் அறியீர் சென்றநீள் நேரம்.

**அங்கவை:-**

இன்னருள் கொண்ட இன்புறு மெந்தாய்!
பொன்மலர் மீன்கள் புவியினுக் கணியைப்
புகட்டும் இன்பமாம் திகட்டாச் சிறப்பை,
இயற்கை அன்னையின் மயக்குறு கூத்தை
என்மனங் கொண்டது இனியென் செய்வது?

**பாரி:-**

இயற்கை யழகின் எல்லையில் கூத்தை
பெயர்க்க லாகாப் பேரழ குடனே
ஐந்நிலப் பகுதியில் பொய்நல மறியா
குறிஞ்சியே காட்டும் குறைவறு திருவால்.

**சங்கவை:-**

என்னே இவ்விடம் எண்ணமி லாது,
நள்ளிர வாகியும் உள்ளம் கொளாது
பறம்பின் பல்வகைத் திறமாம் எழிலை
கண்கொளாக் காட்சியாய்க் கண்டு நின்றோம்!
மக்களைக் காக்கும் மாபெருங் கடனைத்
தக்கதாய்க் கொண்டு தாங்கிடும் எந்தாய்!
காத்தற் றொழிலாம் கடப்பா டுடையார்க்
கேற்ற அரிதுயில் எத்தனை அவசியம்.

**பாரி:-**

அரிதுயில் கொள்வது அரிதாம் செயலே;
மாரி பொய்ப்பினும் மன்னர்க்கு வசையே
வாரி குன்றினும் பாருளோர் பழிப்பர்;
இயற்கை கெடினும் இகழ்வர் மக்கள்;
குறுநில ஆட்சிக் குரியோன் எனினும்
பெரும்பெரும் கவலைகட் குரியன் காவலன்;
எழுவீர் மக்காள்! தொழுவீர் வேலனை,
இனிநாம் செல்வோம் துயில்நாம் கொளவே.

(தொடரும்.)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மொழி வழங்கற் பாட்டில் இருமொழி எழுத்துக்களாலும் வழங்கப்பெறல் வேண்டுமெனுங் கொள்கையைக் குறித்தும் பொது மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென வேண்டுகின்றேம். ஒரு மொழிக்கு இருவகை எழுத்துக்கள் இருத்தல் எத்துணை வியப்பினைத் தருகின்றது பாருங்கள்! வடநாட்டினர் பிணக்கு இங்ஙனமாகவும், தென்னுட்டினர் இம்மொழியைக் கற்றல் எத்துணை வருத்தத்தைத் தரும் செயல் என்பதை யாம் கூறவும் வேண்டுமோ ?

தென்னுட்டில் ஏறக்குறைய 10-கோடி மக்கள் தமிழ்,தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளைப் பேசி வருகின்றனர். இப்பத்துக்கோடி மக்களும் 'தேவநாகரி' எழுத்தையும், 'பார்சி' எழுத்தையும் இனிமேல் புதிதாகக் கட்டாயத்திற்குட்பட்டுக் கற்றுக் கொண்டு 'இந்துஸ்தானி'யைப் 'பார்சி' எழுத்திலும் 'தேவநாகரி' எழுத்திலும் எழுத அறிந்துகொண்டு, இருமொழித் தன்மையிலும் பயன்படுத்தி, ஒலிக் குறைவின்றிப் பேசவும் ஒல்லுமோ ?

வடமாகாணங்களில் வழங்கும் மொழிகள் எல்லாம் பெரும் பாலும 'தேவநாகரி' எழுத்தையோ அல்லது அதன் திரிபுமொழி எழுத்தையோ அல்லது அதன் திரிபுமொழி எழுத்தையோ தமக்குரிய எழுத்தாகக் கொண்டிருக்கின்றன. இக் காரணத்தால் வடநாட்டிலுள்ள இந்துக்கள் 'தேவநாகரி' எழுத்தைப் புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டியவரல்லர். பெரியார் காந்தியாரின் கட்டளைக் கிணங்கி அவர்கள் எழுதிக் கற்றுக்கொள்ள வேண்டிய எழுத்துப் 'பார்சி' மொழி எழுத்துக்கள் மட்டுமே ஆகும். வடநாட்டு முகம்மதியர் புதிதாக அறிந்துகொள்ள வேண்டிய எழுத்து 'தேவநாகரி' ஒன்றுமேயாகும். தென்னுட்டு மக்கள் இவ் விருவகை எழுத்துககளை யும் புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டியவரா யுள்ளனர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் தனித் தனித்தன்மை வாய்ந்த எழுத்துக்களைக் கொண்ட மொழிகளாகும். 'தேவநாகரி' எழுத்துக்களுக்கும், இந் நால்வகை மொழி எழுத்துக் களுக்கும் ஒரு சிறிதும் தொடர்பு இல்லை. இங்ஙனந் தொடர்பற்ற எழுத்துக்களைக் கொண்ட மொழிகளைப் பேசிவரும் மக்களை ஞான நீராட்டி மாற்றம் செய்து தம் மதத்திற் சேர்ப்பார் போலப் புது மொழிக்குஅடிமைப்படுத்த எண்ணும்கொள்கையினை என்னென்பேம்!

(தொடரும்.)

# புறப்பொருள் பூக்கள்*

திரு. மா. சிவகுருநாதன், ஆசிரியர் சுந்தரப்பெருமாள்கோவில்.

இக் காலத்தில் தொடக்கப்பள்ளிகளிலும் மற்றைய சில கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களுக்குத் தக்கவாறு அப்பாடத் தொடர்பான பொருள்களை நேரில் கண்டு அதன் தோற்றத்தையும், கருத்தையும் மனதில் பதித்துக் கொள்ளத்தக்க முறையில் தக்க பல்வகைத் துணைக்கருவிகளைக்கொண்டு கற்பிக்கின்றனர்.

சான்றாக நிலநூல் (Geography) நாட்டு வரலாறு (History) முதலிய பாடங்களை நடத்தும்போது அப்பாடத்தில் வரும் ஊர்களையும் மற்றைய செய்திகளையும் அறிந்துகொள்ள நாட்டுப் படம் (Atlas) புத்தகம் பெருந் துணையாய் இருக்கிறது. இத்துடன் சில சமயங்களில் நாட்டு வரலாற்றில் தொடர்புள்ள ஊர்களுக்கு மாணவர்களை நேரில் அழைத்துக்கொண்டு போய் (Excurtion) காட்டியும் வருகின்றனர்.

இன்னும் தாவரநூல் (Botany) தொடர்பான பாடங்களை உணர ஓர் தோட்டத்தைக் கல்லூரிகளில் மாணவர் மூலமாய்ப் பயிர் செய்து நாளடைவில் அதன் வளர்ச்சி முதலியவற்றைக் கவனிக்கச் செய்கின்றனர்.

இதே போல் நமது செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கட்கு ஒரு தனி நாட்டுப்பட நூலும், ஒரு மலர்ச் சோலையும் மிக முக்கியமாய் வேண்டியிருக்கிறன எனக் கூறலாம்.

ஏன் எனில் நம் பழமையான நூல்களில் கூறப்படும் நாடுகளும், ஊர்களும் பல உண்டு. அவ்வூர்களில் பல தற்காலத்தில் அழிவுற்று மறைந்தும், சில இருக்குமிடம் அறிய முடியாமலும், சில மாற்றுப் பெயர்களுடனும், சில உள்ளவாறேயும் இருக்கின்றன. இவ்வகை ஊர்களை ஒருவாறு தொகுத்து விளக்கிக் காட்டத்தக்க ஒரு நாட்டுப் படநூல் ஒன்று மிக்க அவசியம் என்பதைத் தமிழன்பர்கள் உணர்வார்கள். இதற்கென ஆராய்ச்சி வல்லுநர்கள் முயற்சி கொள்ளின் விரைவில் வெளியாகும்.

(தொடரும்.)

---

* இதில் கூறப்படும் பூக்களின் வர்ணனையில் மாற்றம் இருப்பின் நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றனம்.